கோகுலம்

8-10-1978 விலை 60 காசு



கோகுலம் கேமல்

வண்ணப்போட்டி

நுழைவுக் கட்டணம் கிடையாது

புள்ளியிட்ட இடங்களில் வெட்டவும்.

பரிசுகள் வென்றிடுவீர்

கேமல்—முதல் பரிசு ரூ. 15
கேமல்—2வது பரிசு ரூ. 10
கேமல்—3வது பரிசு ரூ. 5
கேமல்—5 ஆறுதல் பரிசுகள்
கோகுலம்—5 ஆறுதல் பரிசுகள்
கேமல்—10 சான்றிதழ்கள்



12 வயதுக்குட்பட்ட மாணவ மாணவியர் மட்டுமே பங்கெடுக்க முடியும். மேலுள்ள படத்தை ஏதேனும் கேமல் வண்ணம் உபயோகித்து வண்ணம் தீட்டவும். வண்ணந்தீட்டிய படங்களை இம் முகவரிக்கு அனுப்பவும்: ஆசிரியர் கோகுலம் 84/1—ஸி, ரேஸ் கோர்ஸ் ரோடு, கிண்டி, சென்னை-600 032.

முடிவுகள் தீர்ப்பானது. இதுபற்றிய கடிதத் தொடர்பு வரவேற்கப்பட மாட்டாது.

பெயர் ______________________________

வயது ______________________________

முகவரி ______________________________

நுழைவுகளை இத் தேதிக்கு முன் அனுப்பவும் 31–10–1978

மற்ற விவரங்களுக்கும் உங்கள் தேவைகளுக்கும் தொடர்பு கொள்க

மலர் - 6 இதழ் - 16

அக்டோபர் 8, 1978

காளயுக்தி - புரட்டாசி 22



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் — பாரதியார்

கோகுலம்

சந்தா விவரம் :

இந்தியா:

ஒரு வருடம் — ஆறு மாதம்
ரூ. 15-00 — ரூ. 7-50

வெளி நாடுகள்:

ஒரு வருடம் ரூ. 40-00

ஆமையும் முயலும் - பந்தயம்

முயலும் ஆமையும் ஓட்டப் பந்தயம் நடத்தியதையும், மெதுவாக நகரும் ஆமை பந்தயத்தில் வெற்றி பெற்ற கதையைப் பற்றியும் உங்களுக்கெல்லாம் தெரியும். இதோ இங்கே நீங்கள் ஆமையையும் முயலையும் ஓட்டப் பந்தயம் விடப் போகிறீர்கள். இதில் முயல் வெற்றி பெறவும் வாய்ப்பு உண்டு. ஏனென்றால் இது ஒரு சுவாரசியமான விளையாட்டு.

இங்குள்ள முயலையும் ஆமையையும் ஒரு அட்டையில் டிரேஸ் செய்து வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது இதே போலச் சற்றுப் பெரிதாக வரைந்தும் வெட்டிக் கொள்ளலாம். ஆமையும் முயலும் நான்கு அங்குல உயரம் இருக்குமானால் விளையாட்டு கவர்ச்சியாக இருக்கும். ஒவ்வொரு உருவத்தின் நடுவிலும் ஒரு துவாரம் செய்து கொள்ளுங்கள்.

புகழ் பெற்ற ஓட்டப் பந்தயத்துக்கு இரண்டும் இப்போது தயாராகி விட்டன. பத்து, பனிரண்டு அடிகள் நீளமுள்ள இரு நூலை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றின் ஒரு முனையை நாற்காலியிலோ — அல்லது வெட்ட வெளியானால் அருகருகே இருக்கும் மரங்களிலோ கட்டுங்கள். ஒரு நூலின் மறுமுனையை ஆமையின் முதுகில் உள்ள துவாரத்திலும் மற்றொரு நூலின் மறுமுனையை முயலின் முதுகுத் துவாரத்திலும் நுழைத்துக் கொள்ளுங்கள். இருவரில் ஒருவர் முயலாகவும் மற்றவர் ஆமையாகவும் மாறி இந்த ஓட்டப் பந்தயத்தை நடத்தலாம். கயிற்றைச் சற்றே சாய்வான கோணத்தில் இழுத்துப் பிடித்துக் கொண்டு சுண்ட வேண்டும். நீங்கள் கயிற்றைச் சுண்டச் சுண்ட ஆமையும் முயலும் கயிற்றில் பிரயாணம் செய்யும். இந்த நவீன ஓட்டப் பந்தயத்தில், எது வெற்றி பெறும் என்பது உங்கள் கையில் தானிருக்கிறது. விளையாடிப் பாருங்கள்.

- இட்டு.





தரிசனம்

சாமி கோயில் போகலாம்
சந்தோஷமாய் பாடலாம்
பூமி வாழ வேண்டலாம்
புத்தி தரக் கேட்கலாம்

நல்ல வல்ல மனிதராய்
நாளும் நாமும் வளரவே
எல்லாம் வல்ல இறைவனை
இன்றும் என்றும் வேண்டுவோம்!



தீபாவளி

வானத்திலே திருவிழா
வாங்க வாங்க பார்க்கவே
வேக வேக மாகவே
மேக மெல்லாம் ஓடுதே!

மேளம் அங்கே முழங்குது!
மின்னல் வாணம் ஜொலிக்குது!
வானத்துக்கும் பூமிக்கும்
வண்ணப்பாதை தெரியுது!



தேன் தேன்

தேன் தேன்
கொம்புத் தேன்;
தேடித் தேடி
எடுத் தேன்;
பாத்தி ரத்தில்
வடித் தேன்
பாட்டி யிடம்
கொடுத் தேன்
பாடம் எல்லாம்
படித் தேன்
பங்கு வைத்துக்
குடித் தேன்!



மல்லிகைப்பூ...

மல்லிகைப்பூ கம கமத்து
மணக்கு தம்மா தலையிலே
மற்ற நகை எதுவும் இந்த
மலர்களுக்கு நிகரில்லே!


கொல்லையிலே தோட்டம் வைத்து
செடி வளர்த்தால் தேவலே
கொள்ளை யாகப் பூக் கிடைக்கும்
அம்மாவுக்கும் செலவில்லே!

ஆசை...ஆசை...

மாமா நம்ம தோட்டத்திலே
நெல்லு மரம் வைக்கணும்!
மழை வறண்ட காலத்திலும்
கதிர் விளைஞ்சு கொட்டணும்!

'ஆமா ஆமா' போட்டு மண்டை
ஆட்டினது போதும்
அறிவிய லால் 'நெல்லுமரம்'
ஆக்க வழி பாரும்'.

— ரா. பொன்ராசன்



விவேக



நல்வழி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



லயம் - பிரளயம்


ஒவ்வொரு ஊரிலும் ஒருகோடியில் சிவன் கோவிலும் மற்றொரு கோடியில் பெருமாள் கோவிலும் இருக்கும். இதைத் தான் அக்ரஹாரம் என்பார்கள். ஹரியும் ஹரனும் ஊரின் அக்ர பாகத்தில் அதாவது ஆரம்ப பாகத்தில் இருப்பது அக்ரஹாரம். காலையில் எழுந்தவுடன் விஷ்ணுவையும் மாலையிலும் இரவிலும் சிவனையும் ஒவ்வொரு நாளும் வழிபட வேண்டும். பிரும்மா உலகைப் படைக்கிறார், விஷ்ணு உலகைக் காக்கிறார். அரன் அதாவது சிவன் உலகிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் சாந்தி அளிக்கிறார்.

''ஹரதி இதி ஹரா:'' என்றபடி ஹரதியென்றால் எடுத்துக் கொள்ளுதல் என்று பொருள். அரன் நம்முடைய பாபத்தையெல்லாம் துன்பத்தையெல்லாம் தான் எடுத்துக் கொண்டு சாந்தியை அளிக்கிறார். மஹாப்பிரளய காலத்தில் அரன் எல்லா உயிரினங்களையும் தன்னுள் எடுத்துக் கொள்கிறான். பிரளயம் என்றால் தண்ணீர் வந்து முழுகி விடுவது மாத்திரமல்ல. லயத்தையும் கொடுப்பது பிரளயம். மனதையும் இந்திரியங்களையும் உறுப்புகளையும் லயிக்கச் செய்வது லயம். அதையே நன்றாக லயிக்கச் செய்வது பிரளயம்.

சங்கீதம் கேட்கும் போது, அந்த சங்கீதத்திலேயே மனம் இந்திரியம் — உறுப்பு இவைகளெல்லாம் லயித்து விடுகின்றன. திருப்பதி வெங்கடாஜலபதியையோ — திருத்தணி முருகனையோ பார்க்கும் பொழுது, மனம் — இந்திரியம் - உறுப்பு எல்லாமே அதிலேயே லயித்து விடுகின்றன. ஆனால் அவை சிறிது காலமே லயிக்கிறது. அரன் என்ற சிவனே மனம் - இந்திரியம் - உறுப்பு இவைகளையெல்லாம் நன்றாக லயிக்கும்படி செய்து வருகிறான்.

ஒவ்வொரு நாளும் விழித்துக் கொள்கிறோம் - காரியங்களைச் செய்கிறோம். அதற்கு ஓய்வு வேண்டியிருக்கிறது. இரவிலே தூங்கும் பொழுது, மனம் - இந்திரியம், உறுப்புக்களெல்லாம் அலையாமல் ஒரே இடத்திலேயே லயித்து சிறிது போழ்து இருக்கிறது. பிறகு தூக்கம் கலைந்து எழுந்து விடுகிறோம். அப்படியல்லாமல் அவரிடத்திலேயே நன்றாக லயிக்கும்படி செய்பவர் அரன். அவரே தட்சிணா மூர்த்தியாக ஆலமரத்தடியில் அழியா இளமையோடு இருந்து கொண்டு எல்லா உயிரினங்களும் தன்னிடமே லயித்து விடவேண்டுமென்று ஞானோபதேசம் செய்து அருள் பாலிக்கிறார்.

மார்க்கண்டேயர் சிவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மரணப் பிடியிலிருந்து தப்பிக்கிறார். அறுபத்து மூன்று நாயன்மார்களும் மற்றும் பல பெரியோர்களும், சிவனை நினைந்து உருகி தன் வாழ்நாள் முழுவதும்



கழித்து கடைசியில் சிவனையே நேராக கண்டுள்ளார்கள். எல்லா விதமான தோஷங்களும் - பாபங்களும் போவதற்கு சிவனை பூஜித்தல், சிவவழிபாடு செய்தல் : சிவப் பிரதிஷ்டை செய்தல் முதலியனவைகள் விசேஷமாக சொல்லப் பட்டிருக்கிறது.

மஹாவிஷ்ணு அவதாரமாக ஸ்ரீராமர் இருந்த போதிலும், அந்தணனை இராவணனை இலங்கையில் கொன்றுவிட்டு அந்தப் பாபத்தைப் போக்கிக் கொள்ள இராமேஸ்வரத்தில் சிவப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு தன் பாபத்தை தீர்த்துக் கொண்டார் என்று வரலாறு கூறுகிறது. பல பெரியோர்களுடைய வாழ்க்கையிலே, சிவதரிசனம் செய்யாமல் - சிவபூஜை செய்யாமல் உணவை உட்கொள்வதில்லை என்ற பழக்கம் இருந்து வந்திருக்கிறது. ஒரு பக்தர் உலகிலே எந்த ஒரு விஷயத்தை மறந்தாலும், ''நமச்சிவாயத்தை நான் மறவேன்'' என்று கூறுகிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

ரசாயன ஆராய்ச்சி நிலையமொன்றில் ஒருநாள் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ''ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா'' என்று ஓர் எலி ஆராய்ச்சி சாலைக்குள் நுழைந்தது. கூடவே எலியைச் சாப்பிட ஒரு பூனையும் உள்ளே நுழைந்தது. அவற்றின் ஓட்டப் பந்தயத்தில் பல சீசாக்கள் கீழே விழுந்து உடைந்தன. பார்மால் டிஹைடு (Formal Dehyde) என்ற திரவம் அங்கேயிருந்த பால் கட்டியுடன் கலந்து உறவாடிக் கொண்டு இருந்தது.

விஞ்ஞானி காலையில் வந்து பார்த்தார். பார்மால் டிஹைடும் பால் கட்டியும் சேர்ந்து ஒரு புதுப் பொருளை உண்டாக்கி இருப்பதைக் கண்டார். அதுதான் **பிளாஸ்டிக்!** சர்வம் பிளாஸ்டிக் மயம் என்று இந்த நூற்றண்டை குறிப்பிடலாமில்லையா?

1913ம் ஆண்டில் துப்பாக்கி செய்ய ஒரு நல்ல கலப்பு உலோகத்தை நாடி பிரியர்லி என்ற விஞ்ஞானி, பல வகை உலோகங்கள் கலந்த எஃகைத் தயாரித்தார். இவையெல்லாம் ஒரு மூலையில் கிடந்தன. பல மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் பிரியர்லி அவற்றைப் பார்த்தார். 18 சதவீதம் குரோமியம் கலந்த எஃகு துருப்பிடிக்காமல் இருப்பதைக் கண்டார். மேலும் ஆராய்ச்சிகள் செய்தார். **ஸ்டெயின்லஸ் ஸ்டீல்** (எவர்சில்வர்) எனப்படும் கலப்பு உலோகம் பிறந்தது. எவர்சில்வர் பிறந்த கதை இப்படித்தான். தற்போது எவர்சில்வர் முக்கியமான உலோகமாகி விட்டதே.

1879ம் ஆண்டு அமெரிக்காவில் 'ஜான் ஹாப்கின்ஸ்' பல்கலைக் கழகத்தில், ஒரு விஞ்ஞானி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். வேலை முடிந்ததும் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றார். அவர் எதைத் தொட்டாலும் அது தித்தித்தது. கைபட்டதெல்லாம் தித்தித்தது. ஆராய்ச்சி சாலைக்கு ஓடினார். தம் ஆராய்ச்சியின் முடிவைக் கண்டார். பால்பெர்க் என்ற விஞ்ஞானியால்—இந்த ஆர்தோ பென்சாயின் சல்பினமைடு என்று—கண்டு பிடிக்கப் பட்ட பொருள்தான் **சாக்கரின்** எனப்படும். இது சர்க்கரையை விட 550 மடங்கு அதிகம் தித்திப்புள்ளது.

நீரிழிவு நோய்க்காரர்களுக்கு சாக்கரின் ஒரு வரப்பிரசாதமாயிற்றே.

தொகுப்பு: **பத்மா**

நான் யார் தெரியுமா?

- நாள் தோறும் என் இதயம் 1,03,689 தடவை துடிக்கிறது. என் உடலில் இரத்தம் 1,68,000,000 மைல்கள் பயணம் செய்கிறது.
- நாள் தோறும் என் கைவிரல்கள் 0.000046 அங்குலம் வளருகின்றன.
- தினந்தோறும் என் தலைமுடி 0.01714 அங்குலம் வளருகின்றது.
- தினந்தோறும் நான் 23,040 தடவை சுவாசிக்கிறேன்.
- ஒரு நாளில் நான் 438 கனஅடி காற்றை விழுங்குகிறேன்.
- ஒருநாளில் நான் என் உடம்பில் 750 தசைப் பகுதிகளை அசைக்கிறேன்.
- இப்படியிருந்தாலும் நான் களைப்படைவதில்லை. இன்னுமா, என்னைத் தெரியவில்லை?


நான்தான் ''சோம்பேறி!''

- சந்திர மனோகரன்

ஜெம்ஸ் விளையாட்டை பாரீர்

1001 அதிர்ஷ்டப் பரிசுகளைப் பெறவேண்டும்!

விட்டுப்போன எண் எது?



முந்துங்கள்!

உங்கள் விடையை காலி செய்யப்பட்ட பெரிய (30 கிராம்) ஜெம்ஸ் பிளாஸ்டிக் பாக்கெட் ஒன்றுடன் இணைத்து அனுப்புங்கள். வெற்றி பெறும் முதல் 1001 பேர்கள் தலா ரூ. 11/- மதிப்புள்ள ஸ்டேட் பாங்க் அன்பளிப்புச் செக்குகளைப் பெறுவார்கள்.

உங்கள் பதில், பெயர் மற்றும் முகவரியை ஆங்கிலத்தில் மட்டுமே அதுவும் தெளிவான எழுத்துக்களில் எழுதுங்கள். நுழைவுத் தாள்களை இம் முகவரிக்கு அனுப்புக.

"Fun with Gems" Dept. D-36 Post Box No. 56,
Thane-400 601, Maharashtra.

நுழைவுத்தாள்கள் கிடைக்க வேண்டிய கடைசித் தேதி நவம்பர் 17, 1978.

சாக்கலேட் நிரம்பியுள்ள வண்ணமிகுந்த காட்பரிஸ் ஜெம்ஸ்

CHAITRA-C-193 TAM



பாபா சொன்ன பாப்பாக் கதைகள்

ரா. கணபதி

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பாட்டனார்ஸ்தானத்திலிருந்தவர் பீஷ்மர். ''பீஷ்ம பிதாமஹர்'' என்றே அவரைச் சொல்வது வழக்கம். (பிதாமஹர் என்றால் தாத்தா.) ஒழுக்கம், பக்தி, புத்தி, தியாகம், வீரம் எல்லாவற்றிலும் அவர் தலை சிறந்தவர். ஆயினும் துரதிருஷ்ட வசமாக பீஷ்ம பிதாமஹர் கொடியவர்களான கௌரவர்களுக்குத் துணையாக, கௌரவப் படைக்கு ஸேநாதிபதியாக இருந்து, உத்தமர்களான பாண்டவர்களை எதிர்த்துப் போர் செய்ய நேர்ந்தது.

பாரதப் போர் எனப்படும் இப்பெரிய யுத்தத்தின் பத்தாவது நாளன்று அர்ஜுனன் பீஷ்மரைத் தோல்வியுறச் செய்தான். பீஷ்மரின் உடல் முழுதும் அர்ஜுனனின் அம்புகள் தைத்திருந்தன. அதனால் அவர் ரதத்திலிருந்து விழும் போது அவருடைய உடல் நிலத்தில் விழவில்லை; அவரது உடலில் பொத்தியிருந்த அம்புகளின் மறுமுனைகள் நிலத்தில் குத்திட, அவர் அந்த அம்புப் படுக்கையின் மேலேயே படுத்தவாக்கில் விழுந்து விட்டார்!

அப்போதும் அந்தக் கிழவனாரின் உயிர் பிரியவில்லை. மஹாபலம் பொருந்தியிருந்த பீஷ்மர் தாமே இஷ்டப்படி தமது மரண காலத்தை நிர்ணயித்துக் கொள்ளும் சக்தியும் பெற்றவர். எனவே தை மாதம் பிறந்தபின், உத்தராயண புண்ணிய காலத்தில் மரணமடைந்தாலே இறைவனை அடைய முடியும் என்ற சாஸ்திரக் கருத்தையொட்டி அவர் அதுவரைத் தம் உயிரை விடாமல் அம்புப் படுக்கையிலேயே இருந்தார்.

இதனிடையே பாண்டவர்கள் கௌரவர்களை வென்று அரசபதவி எய்தினர். சந்தர்ப்பத்தின் நெருக்கடியால் அவர்கள் பீஷ்மரைத் தாக்கி வெல்லுமாறு நேர்ந்த போதிலும், அவர்களுக்குத் தமது பாட்டனாராகிய அவரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் உண்டு. பீஷ்மருக்கும் அவர்களிடம் மனமார்ந்த பிரியம் உண்டு. எனவே இவர்கள் அரசாட்சிக்கு வந்தபின் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, ''ராஜநீதி, மனித தர்மம், மற்றும் எல்லா விதமான நீதிமுறைகளையும் பீஷ்ம பிதாமஹரே பூரணமாக அறிவார். நீங்கள் யாவரும் உத்தராயணம் பிறக்கும் வரையில் அவரிடமிருந்து இவ்விஷயங்களைக் கற்றாலே, நேர்மையாக ராஜ்ய பாரம் செய்து, நாடு முழுதும் அறம் நிலவும்படிச் செய்ய முடியும்'' என்றார். தாமே அவர்களை பீஷ்மரிடம் அழைத்துச் சென்று அவர்களுக்கு தர்மத்தைப் போதிக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டார்.

தம்மை வெற்றி கொண்டு, குற்றுயிரும் குலை உயிருமாக தேகமெங்கிலும் அம்பு துளைக்க வீழ்த்திய பாண்டவர்களுக்கு பீஷ்மர் வெகு மகிழ்ச்சியுடன் உபதேசம் செய்யத் தொடங்கினார். இதிலிருந்தே அவரது அன்புள்ளமும், தர்மத்தைப் பரப்புவதில் அவருக்கிருந்த ஆர்வமும் தெரிகின்றன அல்லவா?

இந்த சமயத்தில் அவர் செய்த பல உபதேசங்களில் ஒன்றுதான் ''விஷ்ணு ஸஹஸ்ரநாமம்''. (ஸ்ரீ மஹா விஷ்ணுவின் ஆயிரம் பெயர்களைக் கூறும் துதி.)

பலவகைப் பட்டவர்களின் கடமைகளையும், அவர்கள் பின்பற்ற வேண்டிய நெறிகளையும் பீஷ்மர் உபதேசித்து வருகையில் ஒருதினம் அவர் ஓர் அரசனின் சபையிலுள்ள பெரியோர் எப்படி நடக்க வேண்டும் என்பதை விவரமாக விளக்கினார். அரசன் தர்மத்திலிருந்து விலகும் போது அரசவைப் பெரியோர்கள் அவனுக்கு அறத்தை எடுத்துரைத்து இடித்து உரைத்துக் கண்டிக்க வேண்டும் என்று அவர் கூறுகையில், கலீரென்று ஒரு பெண்மணியின் சிரிப்பொலி கேட்டது. அது பரிகாசச் சிரிப்பாகத் தொனித்தது.

சிரித்தது ராணியான திரௌபதி தான்!

பெண்களுக்கும் பழைய நாட்களில் கல்வி கேள்விகளில் சிறந்த இடம் கொடுத்திருந்த படியால், பாண்டவ மன்னரான தர்மபுத்திரருடன் ராணி திரௌபதியும் பீஷ்மரிடமிருந்து நல்லறங்களைக் கற்க வந்திருந்தாள்.

மதிப்பு மிக்க பாட்டனார் உபதேசிக்கும் போது, அதுவும் அம்புப் படுக்கையின் சித்திரவதைக் கிடையே அவர் உபதேசிக்கும்போது, திரௌபதி இவ்விதம் சிரித்தது பாண்டவர்களுக்கு மிக்க வெட்கம் ஊட்டியது. பாட்டனாரை இப்படி அவமானம் செய்து விட்டாளே என்ற எண்ணத்தில் பாண்டவர்கள் மனம் குன்றித் தலை கவிழ்ந்தனர்.

பிறகு சமாளித்துக் கொண்டு பீஷ்மரிடம் ''பிதாமஹரே! திரௌபதி செய்த இந்த அடாத தப்பிதத்துக்கு நாங்கள் மிகவும் வருந்துகிறோம். மன்னித்தருள வேண்டும். நீதி முறைப்படி இதற்காக அவளுக்கு என்ன தண்டனை விதிக்க வேண்டும் என்று தேவரீர் கூறினால் அவ்விதமே செய்கிறோம்'' என்றனர்.

பீஷ்மர் புன்னகை புரிந்தார். ''குழந்தைகளா? திரௌபதி தவறு செய்யக் கூடியவளல்ல. உயர்குடிப் பண்பு அமைந்த ராஜகுமாரி அவள். அப்படிப் பட்டவள் இவ்விதம் பரிகாசமாகச் சிரித்தாள் என்றால் அதற்கு ஏதேனும் காரணம் இருக்க வேண்டும். அவளையே கேட்போம். நீதி முறையில் வெகு முக்கியமான அம்சம், குற்றவாளி என நாம் எண்ணுபவரைத் தீர விசாரிக்காமல் தண்டனை தருவது அநீதியாகும்'' என்று கூறினார்.

பிறகு திரௌபதியைப் பார்த்து, ''அம்மா, குழந்தாய்! நீ சிரித்ததற்கு என்ன காரணம் என்பதை பயமின்றி, தயக்கமின்றிச் சொல்லம்மா'' என்று பரிவுடன் கூறினார்.

திரௌபதி இருகரங்களையும் குவித்து சொன்னாள். ''பூஜ்ய பிதாமஹரே! நான் பண்புக் குறைவாக நடந்து கொண்டு விட்டதற்காக மெத்த வருந்துகிறேன். தாங்கள் தெய்வத் தன்மை பொருந்திய மஹாபுருஷன். கைகட்டி, வாய் புதைத்துத்தான் தங்களது அறிவுரைகளைக் கேட்க வேண்டும். ஆயினும், என் செய்வேன்? என்னையும் மீறிப் பழைய நிகழ்ச்சிகள் முண்டிக் கொண்டு வந்ததால், வசமிழந்து சிரித்து விட்டேன்! மன்னிக்க வேண்டுகிறேன்.''

உடனே கண்ணன், ''தங்காய்! அதென்ன பழைய நிகழ்ச்சி? புரியும்



ஸ்ரீ வீரோமலீ

உள்ளத்தில் உண்மையுடையவர்கள் தோல்வி அறிய மாட்டார்கள்.

பிரார்த்தனை செய்தும் தோல்வி கண்டால் உண்மையுடன் பிரார்த்தனை செய்யவில்லை என்று உணர்ந்து கொள்.

- சின்டோ

படி விளக்கிச் சொல்லம்மா! பிதாமஹரர் தாம் பயமோ தயக்கமோ இன்றி எடுத்துரைக்கச் சொன்னாரே!'' என்றார்.

திரௌபதி குறிப்பிட்ட விஷயம் என்னவென்று அங்கிருந்த அனைவருமே ஊகித்துணர முடியுமாயினும், கொப்புளத்தை நன்றாக ஊதி உடைப்பது போல், எந்தத் தப்பிதத்தையும் பெரிதாக்கிக் காட்டிப் பிறகு உடைத்துச் சரி செய்வதே ஸ்வாமியின் லீலையாதலால் இவ்விதம் கேட்டார்.

திரௌபதி கூறலானாள்: ''பிதாமஹரே! பல வருஷங்களுக்கு முன் தாங்கள் கௌரவர்களின் ராஜசபையில் முதன்மைத்துவம் வாய்ந்த பெரியவராக இருந்தீர்கள். அந்தக் கௌரவர்கள் சூதாட்டத்தில் பாண்டவர்களை வென்று கொண்டே வரும்போது பாண்டவர் என்னையும் பணயமாக வைத்து இழந்தார்கள். அப்போது நான் பிறர் மனைவி, மதிப்புக்குகந்த ராஜஸ்திரீ என்பதையெல்லாம் கௌரவர்கள் சற்றும் பொருட்படுத்தாமல் என்னை நடுச்சபைக்கு இழுத்து வந்தார்கள். இது அதர்மம் என்று அவர்களுக்குத் தாங்கள் ஏன் எடுத்துரைக்கவும், இடித்து உரைக்கவும் இல்லை? அது மட்டும் தானா? பாபி துரியோதனன் என்னிடம், ''இனி நீ என் அடிமை; வேலைக்காரி; வா, என் தொடையில் உட்கார்'' என்று பொதுச் சபையில் தன் தொடையில் அடித்துக் காட்டி அழைத்தான். இந்த அக்கிரமத்தையும் அவைப் பெரியவராகிய தாங்கள் ஏன் கண்டிக்கவில்லை? இதோடு நின்றதா? தர்பார் மத்தியிலேயே அந்தக் கயவர்கள் என் ஆடையைக் களைய ஆரம்பித்தார்களே! அந்தக் கொடூரத்தைக் கூடத் தாங்கள் தடுத்து நிறுத்தவில்லையே! அச்சமயத்தில் நான் அவலறிச் செய்த பிரார்த்தனையைக் கேட்டு இந்தப் பிரபு கண்ணனே அல்லவா, களையக் களைய என் ஆடை வளருமாறு செய்து, களைந்தவர் களையே களைப்படைந்து விழச்செய்து, என் மானம் காத்தான்! ஓர் அபலைப் பெண்ணுக்கு அரச பீடத்தினர் செய்த அநீதிகளையெல்லாம் வாய்மூடிப் பார்த்துக் கொண்டிருந்த தாங்களே இப்போது ஸபைப் பெரியோர்களின் அறங்களைச் சொன்னதைக் கேட்டதும் தான் எனக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்து விட்டது. புத்திமதிகள் ஏராளமாகத் தேவைப்பட்ட கௌரவர்களுக்கு உபதேசம் எதுவும் செய்யாத தாங்கள், நற்குணம் மிக்க தர்ம சாலிகளான பாண்டவர்களுக்கு இப்படி நீண்ட காலமாக உபதேசிப்பதே எனக்கு வேடிக்கையாக இருந்தது. அதற்கு முத்தாய்ப்பாக இன்று முதியோர் கடமைகளை வேறு தாங்கள் விளக்கியவுடன் என்னால் அடக்க முடியாமல் சிரிப்பு வெடித்து விட்டது.''

திரௌபதி இவ்வாறு கூறிமுடித்ததும், பஞ்ச பாண்டவர்களுக்கும், அவள் கூறியது உண்மையே ஆயினும், பெருமதிப்பு வாய்ந்த பிதாமஹரை இப்படி அவள் நேருக்கு நேர் குற்றம் சாட்டி விட்டாளே என்று மனம் குறுகுறுத்தது.

குறும்புக் கண்ணன் இதையும் கவனித்துக் கொண்டு பிதாமஹரைப் பார்த்தான். ஓர் அரிய உண்மையைத் தாம் உபதேசிக்க வேண்டுமென்று கண்ணன் திருவுள்ளம் கொண்டுதான் இந்த கட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறான் என்று பீஷ்மர் புரிந்து கொண்டார்.

எனவே அவர் கூறலானார்: ''பேரன்மார்களே! தவறு என்னிடமிருக்க, அத் தவற்றை திரௌபதி எடுத்துக் காட்டியதற்காக, நீங்களே ஏன் தவறு செய்தது போல வருந்துகிறீர்கள்? எவராயினும் தன் மனத்தில் தோன்றும் உண்மையை வெளிப்படுத்தி விட வேண்டியதே நீதிமுறை. இதன்படி திரௌபதி கேட்டாள். அவள் கேட்டது நியாயம்தானே? அவைப்பெரியோரின் அறங்களை இன்று பிரமாதமாகப் பிரஸங்கம் செய்த நானே அந்த தர்மத்திலிருந்து தவறியது நிஜந்தான். அதைத்தான் இந்த தேவி திரௌபதி கேட்டாள். அவளது ஸத்தியத்துக்கும், தீரத்துக்கும் நாம் அடி பணியத்தான் வேண்டும்.

''குழந்தைகாள்! இப்போது உங்களுக்கெல்லாம் ஒரு பெரிய உண்

துலங்கிடும் தீப ஒளி ஏற்றி — தினம்
தொடர்ந்திடும் கடமையை நிறைவேற்றி
உலகினில் தீமை ஒழிந்திடவும் — நம்
உயர்வினில் தர்மம் வளர்ந்திடவும்
நலமருள் செய்யும் சக்தியினை — இந்த
நவராத்திரியில் வேண்டிடுவோம்.

— குடுக்கையார்



வண்ணப்படம் : திலீப் பானர்ஜி

மையைச் சொல்கிறேன். அக்காலத்தில் நான் ஏன் என் கடமையைச் செய்யவில்லை, அநீதியைக் கண்டு என் ரத்தம் ஏன் அப்போது கொதிக்கவில்லை என்பதன் காரணத்தைச் சொல்கிறேன். அன்று கௌரவர்கள் இட்ட உணவையே நான் உண்டு வந்தேன். அதுதான் அவர்களைப் போலவே என் புத்தியும் கெட்டதற்குக் காரணம். உணவிலிருந்தே ரத்தம் உண்டாகிறது ரத்தத்திலேயே உணர்ச்சி பிறக்கிறது. நமக்கு உணவு படைப்பவரின் குணமும் அந்த உணவோடுகூட நமக்குள் இறங்கி விடுகிறது. கௌரவர் போட்ட சோற்றின் விளைவாகவே எனக்கு அதர்மத்தைக் கண்டு ரத்தம் கொதிக்கவில்லை. என் உடலிலேயே அதர்மம் சேர்ந்து விட்டதே!

''பிற்பாடு அர்ஜுனன் என்னுடலில் ஒரு மயிர்க்கண் மீதியின்றி அம்புகளைச் செலுத்தி அம்புப் படுக்கையில் வீழ்த்தினானல்லவா? அப்போது ஒவ்வொரு ரோமக் கால் வழியாகவும் அந்த அதர்ம ரத்தம் வெளிப்படலாயிற்று. என்னுள் சேர்ந்து விட்ட அதர்மத்தை வெளியேற்றிய அர்ஜுனன் கணை ஒவ்வொன்றின் தாக்குதலையும் எனக்குப் பெரு நன்மை புரியும் தெய்வப் பிரஸாதமாகவே நினைத்தேன். இவ்வாறு, பாபச் சோற்றைத் தின்றதால் உண்டான பாப ரத்தம் முழுதும் வெளியேறி விட்டதால்தான், பிறகு அடியிலே இருந்த தர்ம உணர்வு மறுபடி மேலுக்கு வந்து நான் இவ்வளவு நாட்களாக இத்தனை உபதேசங்களைச் செய்து, இன்று ஆன்றோர், சான்றோர் கடமைகளையும் கூறமுடிந்தது!

''ஆகாரசுத்தம் (உணவுத் தூய்மை) எவ்வளவு முக்கியம் என்ற உபதேசத்தையும் என் மூலம் வழங்கவே திரௌபதி மூலமாகக் கண்ண பெருமான் இப்படி ஒரு கட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறான்!''

பீஷ்மர் இவ்விதம் கூறி முடித்தார்


இறைவனின் நாமங்களைக் கூறியபடியே தயாரிக்கப்பட்ட உணவை, அன்பு மனம் கொண்டவர்கள் பரிமாற, அதனை நாம் இறைவன் நாமாவைச் சொன்னவாறே உண்டால் தான் நமக்கு நல்லறிவு உண்டாகும். கெட்ட எண்ணங்களோடு சமைத்துப் பரிமாறப்படும் ஆகாரம் அதைப் புசிப்பவருக்கும் கெட்ட எண்ணத்தையே உண்டாக்கும்.

பிறர் உணவு தயாரித்துப் பரிமாறும் போது அவர்களுடைய உள்ளெண்ணம் எப்படியிருக்கும் என்று நமக்குத் தெரிய முடியாதல்லவா? இதனால்தான் அவரவரும் தாங்களே திவ்யநாமத்தைச் சொல்லிக் கொண்டு தங்கள் உணவைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. தன் உணவைத் தானே சமைத்துக் கொள்வதற்கு ''ஸ்வயம் பாகம்'' என்று பெயர்.

சித்த சுத்தி (மனத்தூய்மை)க்கு அடிப்படை ஆகார சுத்தி (உணவுத் தூய்மை). இன்று, அன்பில்லாமலும், தெய்வத்தின் நினைவு இல்லாமலும் ஹோட்டல், ஹாஸ்டல் முதலியவற்றில் தயாரித்துப் பரிமாறுகிற உணவை உண்பதால்தான் மக்களிடை ஒழுக்கம், பக்தி ஆகியன குறைந்து வருகின்றன.

இனியாவது ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். தவிர்க்க முடியாமல் ஹோட்டல் ஹாஸ்டல், பார்ட்டி போன்றவற்றில் சாப்பிட நேர்ந்தால் முதலில் அவ்வுணவை மானசீகமாக (மனத்தால்) ஸ்வாமிக்கு நிவேதனம் செய்துவிட்டு, பிரஸாதமாகக் கருதி உண்ண வேண்டும். பகவந் நாமத்தைக் கூறியபடியே சாப்பிட வேண்டும்.

மற்ற எல்லா ஒழுக்கங்களுக்கும் இதுவே ஆதாரமாகும்.



பலே பாலு—பங்களா மர்மம்



வாண்டுமாமா

அவன் பெயர் பாலு...

உங்களுக்கெல்லாம் தெரிந்த அதே பாலுதான்!

ஆனால் 'பலே பாலு'வாக இன்னும் அவன் புகழ் பெறவில்லை. புகழ் வரவில்லையே தவிர அவனுக்குள்ள திறமை, சாமர்த்தியம் தைரியம் இவையெல்லாம் எங்கும் போய்விடவில்லை.

இந்த ஊரிலிருந்துதான் பட்டணத்துக்கு அவன் அப்பா மாற்றலாகிப் போனார். இது ஒரு சின்னக் கிராமமுமல்ல. ஆனால் பெரிய நகரமுமல்ல. அமைதியும் இனிமையும் நிறைந்த ஊர். பாலு படிக்க வேண்டிய பள்ளிமட்டும் மூன்று மைல்களுக்கப்பாலிருந்தது. ஏனென்றால் அவன் அப்பா அவனைக் கான்வெண்ட் கல்விக்குப் பழக்கப்படுத்தி இருந்தார். அம்மாதிரிப் பள்ளி இந்த ஊரில் இல்லை. ஆகவே தினமும் பாலு சைக்கிளில் பள்ளிக் கூடத்துக்கு போவான். அன்றும் அப்படித்தான் புத்தக மூட்டையைக் காரியரில் வைத்துக் கொண்டு தண்ணீர்ப் புட்டியைத் தோள் வழியாக மார்பின் குறுக்கே மாட்டிக்கொண்டு கிளம்பினான்.

''மம்மி, போயிட்டு வரேன்!'' என்று கூறியபடி ஜில்லென்று சைக்கிளில் ஏறி அமர்ந்து விர்ரென்று பறந்தான் பாலு.

''சாயந்திரம் சீக்கிரமா வந்துடு. ஊர் சுத்திட்டு வராதே'' என்று அவன் அம்மா கூறியபோது அது காதில் விழாத தூரத்துக்கு அவன் போயே போய் விட்டான்! பாலுவுக்கு சைக்கிள் சவாரி என்றால் அல்வா விழுங்குவது போலாயிற்றே!

அந்த ஊர்க் கோடியில் ஒரு மதகுப் பாலம். அதைக் கடந்துதான் பாலு போயாக வேண்டும். இன்னும் அந்த மதகுப் பாலத்துக்கு பாலு வரவில்லை. அந்தப் பாலத்து மதகுச் சுவர்மீது பாலு வயதுடைய ஒரு பையன் சாய்ந்தபடி நிற்கிறான். அவன் உடையும் தோற்றமும் அவன் ஏழை, அனாதை என்பதை அறிவிக்கின்றன. ஓடிவந்த களைப்பில் அவன் மார்பு ஏறி ஏறி இறங்குகிறது. உடலெல்லாம் வியர்வை வழிகிறது. 'இனி என்னால் ஓடமுடியாது. பசி வயிற்றை இழுத்துப் பிடித்துக்கிட்டுது' என்று தனக்குள் சொல்லிக் கொள்ளுகிறான் அந்தப் பையன். அழுக்குச் சட்டையால் முகத்து வியர்வையைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தவன் தூரத்தில் ஒரு ரேக்ளா வண்டி கனவேகமாக வருவதைப் பார்த்து விடுகிறான். அவன் பார்வையில் மிரட்சி, பீதி. உடலில் ஒரு பரபரப்பு.

வண்டி நெருங்கி விட்டது. ரேக்ளா குதிரை மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து கொண்டிருக்கிறதே. ''நான் உன்னிடம் மாட்டிக் கொள்ள மாட்டேன்'' என்று தனக்குள் கூறிக் கொண்டே மதகுமேல் ஏறினான் கந்தன்.

ஆம், அந்தப் பையன் பெயர் கந்தன். கந்தன் மதகு மீது ஏறுவதை ரேக்ளா வண்டியில் வரும் மனிதன் பார்த்து விட்டான். ''ஏய்... ஏய்! பயலே நில்லு. தண்ணிலே குதிக்காதே'' என்று கத்தியபடி குதிரையை இழுத்து நிறுத்தி விட்டு மதகு மீது ஓடி வந்தான். ஆனால் கந்தன் தாமதிக்கவில்லை. தொபீர் என்று ஆற்றில் குதித்தே விட்டான்!

''டேய், உனக்கு நீந்தத் தெரியாது. மரியாதையாகக் கரையேறி வந்துரு'' என்று மதகுச் சுவர் மீதாக எட்டிப் பார்த்தபடி கூவினான் வண்டியில் வந்த மாணிக்கம். அவன் வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். ஒருகாலத்தில் கட்டு மஸ்தான உடலாக இருந்திருக்கும். இன்று தளர்ந்து போயிருந்தது. முகத்தில் கொடூரம். அதை எடுத்துக் காட்டும் கொடுவாள் மீசை. சிங்கத்தின் பிடரி போன்ற கிராப், உடலை மூடி ஒரு பனியன். முண்டாவிலே சிகப்புக் கயிற்றில் ஒரு தாயத்து. மூட்டுக்கு மேலே தூக்கிக் கட்டிய மல்வேட்டி. இடுப்பில் மணிபர்ஸ் வைத்த அகல

மான பெல்ட். இதுதான் மாணிக்கம். அந்தப் பையன் கந்தனின் மாமா.

மணிக்கத்தின் கூச்சலுக்குக் கந்தன் மூச்சே விடவில்லை. மூச்சுவிட முடியவில்லை கந்தனால். அவனுக்கு நீந்தத் தெரியாது. ஆகவே காலைக் கையை உதைத்துக் கொண்டு தட்டுத் தடுமாறி மூழ்கி மேலே வந்து தத்தளித்தான். தண்ணீரைக் குடித்து விடாதபடி மூச்சுக் கட்டினான். நல்லவேளையாக ஆற்றின் நடுவே எதற்காகவோ ஒரு மரத்தை நட்டிருந்தார்கள். நட்டிருந்தார்களோ அல்லது நடு ஆற்றில் வளர்ந்திருந்த ஒரு மரம் பட்டுப்போய் அப்படி மொட்டையாக நின்றதோ தெரியவில்லை. எப்படியானாலும் கந்தனை மூழ்கவிடாமல் காப்பாற்ற அங்கு அப்படி ஒரு பட்டமரம் நின்று கொண்டிருந்தது. அவனும் அதைத் தழுவிக் கொண்டு கழுத்தளவு நீரிலே குளிரிலே நடுங்கியபடி நின்று கொண்டிருந்தான். மாணிக்கம் மதகின் மீதிருந்து ''வந்துவிடு வந்துவிடு'' என்று கத்திக் கொண்டிருந்தான். கந்தனைப் பிடித்துக் கொண்டு வர நீரில் குதிக்கவில்லை அவன். புதுப் பனியன் நனைந்து விடும் என்பதினாலோ, அல்லது மாணிக்கத்துக்குமே நீந்தத் தெரியாதோ?



இந்தச் சமயத்தில்தான் 'கிணிங் கிணிங்' என்று தனது ஸ்பிரிங் மணியில் ஒலியெழுப்பியபடி அங்கு வந்தான் பாலு. மாணிக்கத்தின் கந்தனைக் கேட்டான்.

''என்ன சமாசாரம்?'' என்று கேட்டபடி சைக்கிளை விட்டு இறங்கினான் பாலு.

''அதோ தண்ணீரிலே பாரு ஒரு பயல், அவனுக்கு நீந்தத் தெரியாது'' என்றான் மாணிக்கம் கந்தனைச் சுட்டிக் காட்டி.

''இவ்வளவுதானே? நீங்கள் என் சைக்கிளைப் பாத்துக்குங்க. இதோ ஒரு நிமிஷத்திலே உங்கள் பையனைக் கொண்டுவந்து சேக்கறேன்'' என்று சட்டையைக் கூடக் கழற்றாமல் 'தொபுகடீர்' என்று மதகின் மீது ஏறி நீருக்குள் 'டைவ்' அடித்துக் குதித்தான் பாலு. நீச்சல் என்றால் பாய்ச்சல் குதிரை மாதிரி போவான் பாலு. நீந்திக் கொண்டே ''தம்பி பயப்படாதே. அப்படியே அந்தக் கம்பத்தைக் கெட்டியாகப் புடிச்சுக்கோ, நான் வரேன்'' என்று கூவினான் பாலு. ஆனால் கந்தனோ அவன் சொன்னதற்கு மாறாக தன் பிடியைத் தளர்த்திக் கொண்டு அவனிடமிருந்து தப்பும் நோக்கத்துடன் தண்ணீரில் மிதக்கலானான்.



பாலுவிற்குக் கந்தனின் செயல் வியப்பளித்தாலும் கைமாறிப் போட்டு இரண்டே எட்டில் அவன் தலைமயிரைப் பற்றி அவனைப் பிடித்துக் கொண்டான்.

''என்னை விட்டுடு... நான் அந்த மனிதரிடமிருந்து தப்பிப் போகத் தவிக்கறேன். என்னைக் காப்பாத்தி அவர் கிட்டே கொண்டு போகாதே. என்னை விட்டுடு'' — என்று திமிறித் துடித்தான் கந்தன். பாலுவிற்கு வியப்பான வியப்பு. இதில் ஏதோ மர்மமிருக்கிறது என்று உணர்ந்தான். ''சரி, சரி. நான் உன்னை அவர்கிட்டே கூட்டிப் போகல்லே. ஆனா உன்னைத் தண்ணிலேந்து காப்பாத்தி அந்தக் கரைக்குக் கொண்டு சேர்க்கலாமில்லையா? அதுவுமே கூடாதா?'' என்று கேட்டான் பாலு. தற்கொலை செய்து கொள்ளுவது கந்தனின் நோக்கமில்லையே. ஆகவே பாலுவின் வேண்டுகோளுக்குச் சம்மதித்தான். அவனை நீருக்கு மேலாக இருக்கும்படி வைத்துக் கொண்டு நீந்தி மறுபக்கத்துக் கரையில் ஏறினான் பாலு. மதகின் மீதிருந்து கொடுவாள் மீசை மாணிக்கம் ''பயல்களா! டேய், எங்கிட்டேருந்து தப்பிட முடியாது. வந்துடுங்க'' என்று கூச்சல் போட்டுக் கொண்டிருப்பது லேசாகக் கேட்டது. கரையேறிய கந்தன் பாலுவிற்கு நன்றி கூறினான், ''நீந்தத் தெரியாத என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாத்தினதுக்கு உனக்கு ரொம்ப நன்றி. நான் அந்த மனிதனிடமிருந்து தப்பியாக வேண்டும். நான் வருகிறேன் தம்பி'' என்று பரபரத்தான் அவன்.

''அவரிடமிருந்து நீ ஏன் தப்பி ஓடணும் என்று நான் இப்போ உங்கிட்டே கதை கேட்டுக்கிட்டிருந்தா உன்னைத் துரத்தி வரும் அவர் கிட்டே மாட்டிப்பே. ஆனால் இப்போ நீ ஓடினாலும் உன்னாலே அவரிடமிருந்து தப்ப முடியாது. நான் செய்வது சரியோ தப்போ

அது இப்போ எனக்கே தெரியாது.. உனக்கு உதவணும்னு மட்டும் என் மனம் நினைக்குது..... என்னைப் பின் தொடர்ந்து ஓடிவா'' என்று ஈர உடையுடன் ஓடினான் பாலு. ஆற்றின் மறு கரையில் அடர்ந்த காடு இருந்தது. அதில் குன்றும் மலையும் கல்லும் கட்டியும் புதரும் உண்டு. பொழுதுபோகாத நேரத்தில் சாகசச் செயல்களையும் கதைகளையும் நிறையப் படித்திருக்கும் பாலு அதே ஆர்வத்தில் நண்பர்களோடு இங்கு அடிக்கடி சுற்றி யிருக்கிறான். அப்போது இரு மலைப் பாறைகளுக்கு நடுவே குகை போன்ற ஒரு மறைவிடம் இருப்பதைப் பார்த்து வைத்திருந்தான். அங்குதான் இப்போது கந்தனுடன் ஓடினான் பாலு. அந்தக் காட்டுக்குள் யார் கண்ணிலும் படாமல் ஒளிந்து கொள்ளக் கூடிய இடம் அது.

நனைந்த உடைகளைப் பிழிந்து பாறை மீது உலர்த்திக் கொண்டே பாலு, ''இன்று நான் பள்ளிக்கூடம் போவது உன்னால் தடைப்பட்டு விட்டது. அதற்கு ஈடு செய்வது போல உன்னிடமிருந்து ஒரு நல்ல கதையை எதிர் பார்க்கிறேன். அவர் யார்? அவரிடமிருந்து நீ ஏன் ஓடிப் போக விரும்புகிறாய் என்பதை இப்போதாவது கூறலாமல்லவா?'' என்று கேட்டான்.

கந்தன் தன் கதையைக் கூறலானான்.

''எனக்கு நினைவு தெரிந்த பிறகு, நான் என் அப்பாவை அதிகம் பார்த்ததில்லை. எனக்கு அம்மாதான் எல்லாம். அப்பா எப்போதாவது திடீரென்று ஒரு நாள் வருவார். சில நாள் எங்களுடன் இருப்பார். பிறகு எங்கோ போய்விடுவார். அம்மாவிடம் எனக்கு உயிர். அவளிடம் அப்பாவைப் பற்றிக் கேட்டால் விவரமாக ஏதும் கூற மாட்டாள். கண்ணீர் வழியும். அம்மா அழுவதை என்னால் தாங்க முடியாது. ஆகவே நான் அவளை ஏதும் கேட்க மாட்டேன்.

''ஒரு நாள் என் அருமை அம்மா திடீரென்று இறந்து போனாள். என் அப்பா என்னை, நீ பாலத்தில் பார்த்தாயே ஒரு மனிதர், அவரிடம் கூட்டி வந்து, 'இனி இவர்தான் உனக்கு எல்லாம் இங்குதான் நீ வாழ வேண்டும்' என்று கூறி என்னை அவரிடம் விட்டு விட்டுப் போய் விட்டார். அதன் பிறகு என் அப்பாவை நான் பார்க்கவே இல்லை.

''இந்த மனிதர் என் மாமா. என் அம்மா உயிரோடு இருந்தபோது நான் இவரைப் பார்த்ததே யில்லை. இவர் பெயர் மாணிக்கம். என்ன தொழில் செய்கிறார், எப்படிச் சம்பாதிக்கிறார் என்று தெரியாது. ஆனால் இவரிடம் நிறையப் பணம் புழங்கியது. யார் யாரோ இவரைத் தேடி வருவார்கள். ரகசியமாகப் பேசுவார்கள், சிரிப்பார்கள், குடிப்பார்கள். எனக்கென்னவோ அவர்களின் பேச்சும் நடத்தையும் பிடிக்கவே இல்லை. இயற்கைக்கு மாறான, நியாய மில்லாத வழிகளைக் கையாண்டு வாழ்கிறார்கள் என்று மட்டும் தோன்றியது. என் மாமாவை எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவருக்கோ என்னை விட மனமில்லை. நானோ அநாதை. என்னிடம் நிறைய வேலை வாங்கினார். என் வயதுக்கும் என் சக்திக்கும் மேலான வேலைகளை எனக்கு அளித்தார். ஆனால் பசியாற உணவு தரமாட்டார். என்னைத் தன் அடிமையாக, அதற்கும் கேவலமாக நினைத்து நடத்திய அவரிடம் என்னால் எப்படி வாழ முடியும்? ஆகவேதான் ஒரு நாள் ஓசைப்படாமல் அவர் வீட்டிலிருந்து கிளம்பி விட்டேன். என் துரதிர்ஷ்டம் வழியில் என் மாமா வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரரை சந்திக்கும்படியாயிற்று. என் செய்கையை அவர்தான் என் மாமாவுக்குத் தெரிவித்திருக்க வேண்டும். என்னைத் துரத்தியபடி அவரது ரேக்ளா வண்டி வந்தது தற்செயலான நிகழ்ச்சி யல்ல. நல்ல வேளை உன் உதவி கிடைத்தது. நரகத்திலிருந்து விடுதலை பெற்றேன்'' என்று தன் கதையை முடித்தான் கந்தன்.

''அது சரி, உன் மாமா சட்டத்துக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார் என்றால் அதை நீ போலீசுக்குத் தெரிவித்திருக்கலாமே?'' என்று கேட்டான் பாலு.

''முடியாது. அவரைக் குற்றவாளி என்பதை நிரூபிக்க என்னிடம் எவ்வித ஆதாரமும் கிடையாது. தவிரவும் அவர் என்னுடைய சொந்த மாமா'' என்றான் கந்தன்.

''ஓஹோ! சரி. எங்கு போய் எப்படி வாழப் போவதாகத் தீர்மானித்திருக்கிறாய்?''

''மாமா வீட்டுக்கு அடுத்த வீட்டில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் இருந்தார். அவருக்கு என்னிடம் அனுதாபம் உண்டு. இப்போது அவர் இங்கிருந்து ஐம்பதாவது மைலில் ஓர் ஊரில் இருக்கிறார். எப்படியாவது அவரிடம் போய் விட்டால் என் வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு வழியைச் செய்வார் அவர்'' என்றான் கந்தன்.

''என்னால் முடிந்த உதவியை உனக்குச் செய்கிறேன், கவலைப்படாதே'' என்றான் பாலு.

(தொடரும்)



ஒ... ஏம்பம்
முதலாளி: ஏன்யா, உன்னைப் பலகாரம் பண்ணச் சொன்னேனு, பலாத்காரம் பண்ணச் சொன்னேனு?
திருமதி. சாந்தா புகழேந்தி.
மனைவி: என் உறவினர்களைக் கண்டால் உங்களுக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை.
கணவன்: அப்படிச் சொல்லாதே. என் மாமியாரைக் காட்டிலும் உன் மாமியாரைத் தான் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது.
பூ. கணேஷ்.
''எங்க தாத்தா சின்ன வயசிலே தலையிலே ஒரு கையும் வாயிலே ஒரு கையும் வச்சுக்கிட்டிருப் பாராம். அது நிரந்தரமா இப் போதும் இருக்கு.''
''அடடே! அப்படியா?''
''ஆமாம் தலையிலே வழுக்கை. வாயிலே பொக்கை.''
டி. வி. பாலு.
வேலைக்காரன்: இப்படி என்னை அநியாயமா டிஸ்மிஸ் பண்ணிட்டீங்களே எஜமான். நீங்க சொல்லி எதையாவது நான் தட்டியிருக்கேனு?
எஜமான்: ரொம்பசரி, என் மேஜை மேலிருக்கும் தூசியைக்கூட நீ தட்டினது கிடையாது.
வை. சுப்பிரமணியம்.
ஆசிரியர்: தினமும் ஏதோ கஷ்டமான வேலை செய்வதாகச் சொன்னயே. அதை நீ மட்டும் செய்கிறயா? கூட யாராவது செய்றாங்களா?
சிறுவன்: என் அம்மாவும் கூடச் செய்யறா. காலையில் என்னை எழுப்பக் கஷ்டப் படறா. நானும் எழுந்திருக்கக் கஷ்டப் படறேன்
கோ. தீபா.
கிட்டு: இந்த ஒட்டகம் மட்டும் ஏன் அப்படி அஷ்டகோணலா அவலட்சணமா இருக்கு?
பெட்டி: ஏன் தெரியுமா? ஊசிக்காது வழியாக நுழைய முயற்சி செய்து தன்னுடைய உருவத்தை நாசப் படுத்திக் கொண்டு விட்டது ஒட்டகம். அதனால் தான்.
பூ. கணேஷ்.

சரணம் கணேசா ! 4



விநாயகர் விசுவரூபம் கொண்டு அன்னையைத் தோளில் தூக்கியபடி தம் இடக்கையில் பலிக்காசனத்தை அழுத்தக் கலிபாசுரன் விழி பிதுங்கப் பூமிக்கு வருகிறான்.
ஐயோ என்ன கோரம்? என் குழந்தையைக் கொல்ல எத்தனை முயற்சிகள்?
விநாயகருக்கு ஒரு வயது. பிறந்த நாள் வைபவத்தில் சிவபிரான் நடராஜராக நாட்டியம் செய்தார். அப்பாவுடன் தொப்பைப் பிள்ளையாரும் ஆடினார்.
நாட்டிய முடிவில் விநாயகர் தமது கால் சிலம்புகளைத் தூக்கி அசைக்க, அதிலிருந்து பூச்சிகளைப் போல ராட்சதர்கள் செத்து உதிர்கின்றனர்.

கதை: **ஹஸ்தினி** படக்கதை அமைப்பு: **வாண்டுமாமா** சித்திரம்: **விஜு,**



அன்பு உள்ளம்

சின்ன வெங்கட்ராமன்



அழகான பென்சில்... புத்தம் புதியது. விலை உயர்ந்ததுதான். பார்த்தாலே தெரிகிறதே..!

இந்தப் பென்சில் இங்கே எப்படி வந்தது...?

நினைவு படுத்திக் கொண்டு பார்த்தேன்.

வகுப்பில் எவரிடமாவது வாங்கினேனா...? மறந்து... வீட்டிற்கு எடுத்து வந்து விட்டேனா...?

இன்று வகுப்பில் எழுதும் வேலைதான் இல்லையே...! மேலும்... எதையும் எவரிடமும் 'இரவல்' வாங்குவதில்லை என்றுதான் முடிவு செய்து விட்டேனே.

இது எப்படி என்னுடைய புத்தகப் பைக்குள் வந்து சேர்ந்தது?

எவரேனும் வகுப்பில் 'திருடி' விட்டனரோ...? தாங்கள் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்து, என்னுடைய புத்தகப் பையில் இதைப் போட்டு விட்டிருக்கலாம் அல்லவா...?

சே...! அந்த மாதிரியும் நடக்குமா...?

வகுப்பு ஆசிரியர் மிகவும் கண்டிப்பு உடையவர். ஒழுக்கமுடன் தனது வகுப்பு மாணவர்களை வளர்த்து வருகின்றாரே!

பின்... இந்தப் பென்சில் இந்தப் பைக்குள் எப்படித்தான் வந்தது!?

அம்மா வாங்கி வந்திருப்பாளோ..?

பாவம்.... அம்மா! 'கூலி' வேலைக்கு போகிறாள். அவள் சம்பாதித்து வரும் கூலியோ மிகவும் குறைவு. அப்பா இறந்து போனதினால் அம்மாவிற்குத்தான் எத்துணை கஷ்டம்?

அதனால்தான் எதையும் அம்மாவிடம் கேட்பதில்லை. பள்ளிக்கூடத்தின் தேவைகள் அனைத்தும் நானே சமாளித்து வந்தேன்.

பென்சில் வாங்கித் தரும்படி அம்மாவிடம் கேட்கவில்லையே. எதற்காக இந்த கஷ்டமான நேரத்தில் இதனை வாங்கினார்கள்?

இப்பொழுதுதான் நினைவிற்கு வருகிறது...!

அன்று... திங்கட் கிழமை! முதல் வகுப்பு ஆங்கிலப் பாடம். அதற்கான ஆசிரியர் வரவில்லை. தமிழ் ஆசிரியர்... அந்த வகுப்பை எடுத்துக்கொண்டார். வந்தவரோ... கட்டுரை எழுதும்படி சொன்னார்.

நான் இதை எதிர்பார்க்கவில்லை. எழுதுவதற்கோ என்னிடம் 'பென்சில் இல்லை. முன்னதாகவே இது தெரிந்திருந்தால்...

என் தோழியிடம் வாங்கி வந்திருப்பேன். இப்பொழுதோ... இருக்கையை விட்டு எழுந்து செல்ல முடியாது. தமிழாசிரியர் கடுமையானவர். அதற்குச் சம்மதிக்க மாட்டார். என்ன செய்வது?...

என்னுடைய பெஞ்சியில்... எனக்கு அருகில் உள்ளவர்களிடம் தான் கேட்க வேண்டும். அவர்களோ... என் மீது பொறாமை கொண்டவர்கள் ஆயிற்றே! உதவி செய்வார்களா...?

வேறு வழி இல்லை. அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

'பிரேமாவின்' காதில் கிசுகிசுத்தேன். அவளோ முகத்தைச் சுளித்து விட்டாள். 'ராதா'விடம் கேட்டேன். அவளும் மறுத்து விட்டாள். எழுந்து சென்று எவரிடமும் கேட்கவும் முடியாது.

தவியாகத் தவித்துக் கொண்டு இருந்தேன். ஆசிரியர் கவனித்து விட்டார்.

''என்ன சீதா... கட்டுரை எழுதவில்லையா? எழுதும்படி சொல்லி எவ்வளவு நேரம் ஆகிவிட்டது?''

பதில் சொல்லுவதற்கு எழுந்தேன். அதற்குள் 'ராதா' எழுந்து விட்டாள்.

''அவளிடம் பென்சில் இல்லை சார். அவள் பள்ளிக்கூடத்திற்கு என்று எதையுமே வாங்குவதில்லை. எல்லாமே அவள் பிறரிடம்தான் வாங்குவாள்.''

'ராதா' பேசி முடிக்கவில்லை. பக்கத்தில் இருந்த 'பிரேமாவும்' எழுந்து கொண்டாள்.

''புத்தகம் ஒருவரிடம், பென்சில் ஒருவரிடம். இந்த மாதிரி இரவல் வாங்குவதுதான் இவள் வழக்கம்.

நீங்கள் திடுமென்று இன்றைக்குக் கட்டுரை எழுதும்படி சொன்னீர்கள். அகப்பட்டுக் கொண்டாள். இல்லா விட்டால்... எவரிடமாவது இரவல் வாங்கிச் சமாளித்து இருப்பாள். இவளை நாங்கள் 'ஓசி சீதா' என்று தான் கூப்பிடுகிறோம்.''

ப்ரேமாவின் பேச்சைக் கேட்டு வகுப்பில் சிலர் சிரித்தனர். அவர்களுக்கு என்மீது பொறாமை உண்டு. என்னைப் போன்று தங்களால் படிக்க முடியவில்லையே என்ற கோபம் அவர்களுக்கு. நான் சிக்கலில் மாட்டிக் கொண்டேன். சிரிக்காமல் என்ன செய்வார்கள். அழுக்கு மனம் கொண்டவர்கள் அல்லவா அவர்கள்!

என்னுடைய குடும்பநிலை தெரியாது ஆசிரியருக்கு. அவரும் கோபமாகப் பேசி விட்டார்.

ஒரு முடிவிற்கு வந்தேன். இனிமேல் இரவல் கேட்பதே இல்லை. அதற்காக அம்மாவையும் தொந்தரவு செய்யப் போவதில்லை.

ஞாயிற்றுக் கிழமை விடுமுறை தானே. அன்று அம்மாவுடன் 'கூலி' வேலைக்குப் போக வேண்டும். அதில் கிடைக்கும் சம்பளத்தில் வேண்டியதை வாங்கிக் கொள்ள வேண்டும்.

முடிவை அம்மாவிடம் சொன்னேன். அம்மாவும் ஒப்புக் கொண்டாள்.

அந்த ஞாயிற்றுக் கிழமையைத் தான் எதிர்பார்த்து இருந்தேன். அதற்குள் அம்மா அவசரப்பட்டு விட்டாளே. நான் கூலி வேலைக்குச் செல்வது அம்மாவிற்குப் பிடிக்கவில்லை போலும்! அதனால்தான்... அம்மாவே 'இதனை' வாங்கி வந்தாளோ...?

அம்மா வந்தவுடன் கேட்டேன். பதில் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. அவர்களும் 'இதை' வாங்கி வரவில்லையாமே!

பின்பு....

என்னுடைய புஸ்தகப் பைக்குள் இந்தப் பென்சில் எப்படித்தான் வந்தது! சந்தேகமே இல்லை. எவரோ செய்வித்த சதித் திட்டம்தான்... இது!

எனக்கு ஆசிரியர்களிடம் 'நல்ல பெயர்' உண்டு. அதைக் கெடுத்து விடத்தான் இப்படிச்செய்திருக்கிறார்கள்.

நாளைய தினம் 'பென்சில்' காணவில்லை என்று வகுப்பில் 'பரபரப்பு' இருக்கும். என்னுடைய புஸ்தகப் பையிலிருந்து 'அதை' எடுப்பார்கள். நான்தான் 'திருடி' என்று முடிவு எடுப்பார்கள்.

இந்த நினைவு வந்தவுடன் என்னால் வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை.



வகுப்பு ஆசிரியரிடம் நடந்ததைச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தேன். அவர் வீட்டிற்குக் கிளம்பி விட்டேன்.

அன்று வகுப்பிற்கு வந்த ஆசிரியர் மிகவும் கடுமையாகக் காணப்பட்டார். அவர் என்றும் சிரித்த முகத்தோடு தான் வகுப்பில் நுழைவார். இன்றோ...? அவர் முகத்தில் 'சீற்றம்' இருந்தது.

ஆசிரியர் தன்னுடைய குரலை கடுமையாக வைத்துக் கொண்டு பேசினார்.

''இன்று... இந்த வகுப்பில் கெட்ட பாதையில் எவரோ காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள். எனக்குப் பிடிக்காத பழக்கம் அது. ஏதோ... தவறான எண்ணத்தில் அவ்வாறு செய்திருக்கிறார்கள்.

''தவறு செய்வது இயற்கை. அது தெரிந்த பின்... அதைத் திருத்திக் கொள்வதுதான் நல்லது. திருந்த மறுபவர்களுக்கே தண்டனை கிடைக்கும்.

''இதோ... இந்தப் புதிய பென்சில்... கீதாவின் புத்தகப் பைக்குள் அவளையும் அறியாமல் வைக்கப் பட்டுள்ளது இதனைச் செய்தது யார்?''

இந்தக் குற்றச் சாட்டை... அங்கு எவரும் எதிர்பார்க்கவில்லை. என்ன நடக்குமோ என்ற பயம் எல்லோருடைய முகத்திலும் தெரிந்தது.

சிலநிமிடங்கள் கழிந்தன. கிழக்குக் கோடியிலிருந்து 'சாந்தி' எழுந்து நின்றாள்.

''நான்தான் சார்... நான்தான் அதைக் கீதாவின் புஸ்தகப் பைக்குள் வைத்தேன். அவளுக்குத் தெரியாமல் அவளுடைய புஸ்தகப் பைக்குள் வைத்தது தவறுதான்..''

''நீயா...?'' ஆச்சரியத்துடன் கேட்டார் ஆசிரியர்.

ஏன்... கீதாவிற்குக் கூடத்தான் ஆச்சரியமாக இருந்தது. அவளுடைய இணை பிரியாத தோழியல்லவா... அவள்!

கீதாவிற்கு 'அவப்பெயர்' தேடித் தருவதற்குச் 'சாந்தி' முயற்சிப்பாளா... என்ன?

சாந்தியின் பேச்சில் ஆசிரியருக்கு நம்பிக்கை வரவில்லை. அவர் மீண்டும் கேட்டார்.

''நீயா... இந்த வேலையைச் செய்தாய்...? எதற்காக இப்படிச் செய்தாய்?''

சாந்தி, தமிழ் வகுப்பில் அன்று நடந்தது அனைத்தும் சொன்னாள்.

''அது சரி... சாந்தி. நீ... இந்தப் பென்சிலை கீதாவின் புஸ்தகப் பையில் வைத்த காரணம் என்ன?''

''தமிழ் வகுப்பில் கீதாவிற்கு நேர்ந்த அவமானம் என்னுடைய மனதை மிகவும் உலுக்கி விட்டது. அவளுக்கு எப்படியும் உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தேன்.

''அவளோ... 'எவருடைய உதவியையும் இனிமேல் பெறுவதில்லை. நானே உழைத்து... என் தேவைகளை நானே தேடிக் கொள்வேன்' என்று சொல்லி வந்தாள்.

''ஞாயிற்றுக் கிழமைதான் அவளால் கூலி வேலைக்குச் செல்ல முடியும். அதன் பிறகுதான் அவளால் பென்சில் வாங்க முடியும். அதற்குள்.... மீண்டும் இதுபோன்ற நெருக்கடி அவளுக்கு வந்தால் என்ன செய்வது?

''புதிய பென்சில் ஒன்றினை என்னுடைய சேமிப்புப் பணத்திலிருந்து வாங்கித் தருவது என்று முடிவு செய்தேன்.

''அதை நேரில் கீதாவிடம் கொடுத்து அப்படிச் செய்தால் 'அதை' ஏற்றுக் கொள்ள மாட்டாள் அவள். பிடிவாத குணம் கொண்டவள் கீதா.

''ஆகையால்தான் அந்தப் பென்சிலை அவளையும் அறியாமல் அவளுடைய புஸ்தகப் பைக்குள் வைத்தேன். அதை பார்த்தவுடன் அவள் என்னிடம்தான் வருவாள் என்றும் நம்பினேன். என்னிடம் கேட்காமல் எதையும் செய்வதில்லையே அவள்!

''அந்த நேரத்தில், என்னுடைய ஆசையைச் சொல்லலாம். அவளும் சமாதானம் அடைவாள். என்னுடை உதவியை ஏற்றுக் கொள்வாள்.

''இவ்வாறு நினைத்துத்தான் 'அவ்வாறு' செய்தேன். கீதாவிற்குக் களங்கம் செய்வது என் நோக்கம் இல்லை.''

சாந்திக்குப் பேச முடியவில்லை. துக்கத்தால் தொண்டை கமறியது.

ஆசிரியர் சாந்தியின் அன்பு உள்ளம் கண்டு மனம் நெகிழ்ந்தார்.

கீதாவிற்கோ, கண்ணீரே வந்து விட்டது.

'அன்பு உள்ளம் கொண்ட தோழி எனக்கு இருக்கிறாள். இதை அறியவில்லையே நான்? எத்தனை சிறுமையான நினைவு... அவசரப்பட்டு ஆசிரியரிடம் சென்று எவ்வளவு சொல்லிவிட்டேன்.' அவள் மனம் சஞ்சலம் அடைந்தது.

கீதாவின் மீது 'பொறாமை' கொண்ட அந்த பிரேமாவும்... ராதாவும் கூடத்தான் சாந்தியின் அன்பு உள்ளம் கண்டு வெட்கித் தலை குனிந்தனர்.

ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்

ஹாம்லெட்

கிருஷ்ணவேணி

4





தன் தந்தையின் மரணத்துக்கும், சகோதரியின் தற்கொலைக்கும் இளவரசன் ஹாம்லெட்டே காரணம் என்பதினால் அவன்மீது வெறுப்பும் பழிவாங்கும் கொதிப்பும் கொண்டிருந்தான் லார்டெஸ். அதை அறிந்து கொண்ட க்ளாடியஸ், அவனைத் தன் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கருவியாக்கிக் கொண்டான். ஹாம்லெட்டைக் கொல்வது எப்படி? பிறர் சந்தேகிக்காத படி இருக்க வேண்டும். தந்திர சாலியான க்ளாடியஸ் அதற்கும் ஒருவழி கண்டு பிடித்து விட்டான். ஹாம்லெட்டுடன் லார்டெஸ் நேருக்கு நேர் வாட்போர் நிகழ்த்த வேண்டும். வீரத்தை வெளிப்படுத்தும் விளையாட்டாகவும், அதைப் பாராட்டி பரிசு தரும் விழாவாகவும் ஏற்பாடு செய்திருந்தான் க்ளாடியஸ். சூழ்ச்சி, வஞ்சனை என்று பிறர் சந்தேகிக்காதபடி வாட்போர் பலர் முன்னிலையில் நடைபெறும் என்றும், ஹாம்லெட் வெற்றி பெற்றால் பந்தயப் பொருள்களாக உயர்ஜாதிக் குதிரைகள் ஆறும், சிறந்த வாள் ஆறும் பரிசாகத் தரப்படும் என்று அறிவித்தான் க்ளாடியஸ்.

வாட்போரைப் பற்றிய செய்தியை, அரண்மனை அதிகாரி ஒருவன், ஹாம்லெட்டிடம் கொண்டு வந்து கொடுத்தான். தனக்கும் தன் காதலியின் சகோதரனுக்கும் ஏற்பாடாகி இருக்கும் வாட் போரைப்பற்றி அறிந்த ஹாம்லெட் விரக்தியாகச் சிரித்தபடி, ''ஹாம்லெட் நினைத்தால் இந்தப் போரில் வெற்றி பெறுவான் - என்று போய் உங்கள் மன்னனிடம் தெரிவியுங்கள்'' என்றான்.

லார்டெஸுடன் வாட்போர் நடத்தத் தன் சம்மதத்தை அளித்து விட்டாலும் ஹாம்லெட்டுக்கு மனப்பூர்வமாக அதில் விருப்பமில்லை. தன் உயிர்த் தோழன் ஹொரேஷியோவிடம் தன் மனநிலையைக் கூறினான் ஹாம்லெட். ''இந்த விளையாட்டுப் போட்டியை ஒத்திபோடச் செய்கிறேன். 'இதில் கலந்து கொள்ளுமளவுக்கு உன் உடலும் உள்ளமும் சரியாயில்லை' என்று கூறி நிறுத்தி விடுகிறேன்'' என்றான் ஹொரேஷியோ. ஆனால் ஹாம்லெட் அதற்கு ஒப்பவில்லை. திட்டமிட்டபடி வாட்போர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போவதாகத் தெரிவித்தான்.

அரண்மனையின் விஸ்தாரமான கூடத்தில் மன்னரும் மகாராணியும் மற்றும் பிரபுக்களும் வந்து குழுமி இருந்தனர். வாள்களும் கையுறைகளும் தயாராக வைக்கப் பட்டிருந்தன. ஒரு மேஜைமீது மதுக் கிண்ணங்களும் ஜாடிகளும் இருந்தன—







வெற்றி பெறுபவருக்குப் பாராட்டி வழங்குவதற்காக. யாருக்குமே துளியும் சந்தேகம் ஏற்படாதபடி க்ளாடியஸ் இளவரசனிடம் பரிவோடு பேசினான், வரவேற்றான். ஆனால் வாள்களில் ஒன்றின் முனையில் கொடிய விஷத்தை தடவுமாறு லார்டெஸிடம் ஏற்பாடு செய்திருந்தான் க்ளாடியஸ். அதைப் பற்றி யாருக்குமே தெரியாது. விஷம் தோய்க்கப்பட்ட அந்த வாளினால் ஏற்படும் சிறுகீறல் கூட மரணத்தை உண்டாக்கும் வல்லமை பெற்றது. தன் மகனைக் கொல்ல இப்படியொரு சதித் திட்டம் உருவாக்கப் பட்டிருப்பது ராணிக்கும் தெரியாது. வாட் போரில் வல்லவனான தன்மகன் ஹாம்லெட் நிச்சயம் வெற்றி பெறுவான் என்ற நம்பிக்கையோடிருந்தாள். பந்தயத்தில் ஈடுபடும் இருவரும் கை குலுக்கிக் கொண்டார்கள். அடுத்த விநாடி ஹாம்லெட் கூவினான்: "எங்கள் வாட்களைக் கொடுங்கள், சீக்கிரம்!"

வீரர்கள் தங்களுக்கு விருப்பமான வாளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமையுண்டு. திட்டமேதுமின்றிச் செயல்படுவது போல, லார்டெஸ் தனக்கான வாளை முதலில் எடுத்துக் கொண்டான். அவன் தேர்ந்தெடுத்த அந்த வாளின் முனையில் கொடிய விஷம் தடவப்பட்டிருந்தது. எவ்விதச் சந்தேகமும் இன்றி மீதி இருந்த மற்றொரு வாளை ஹாம்லெட் எடுத்துக் கொண்டான். இருவரும் எதிர் எதிராக நடந்து சென்று ஒருவர் மீது ஒருவர் பாய்வதற்குத் தயாராகப் பொருத்தமான இடத்தில் போய் நின்று கொண்டார்கள். கூடி இருந்தோரின் ஜோடிக் கண்கள் அத்தனையும் ஹாம்லெட் மீதும் லார்டெஸ் மீதுமே பதிந்திருக்க வாட்போர் ஆரம்பமாயிற்று.

இருவருமே தலை சிறந்த வீரர்கள். வெற்றி யார் பக்கம் என்று நிச்சயிக்க முடியாதபடி வாள் வீசினார்கள். ஒரு சமயம் ஹாம்லெட் லார்டெஸின் உடலில் தன் அபாரமான வாள்வீச்சினால் காயமுண்டாக்கிய போது பார்வையாளரில் ஒருவர் "சபாஷ்! சரியான அடி கொடுத்தாய்!" என்று ஹாம்லெட்டைப் பாராட்டினார். அப்போது சூழ்ச்சிக் கார க்ளாடியஸ், மதுக் கோப்பையையெடுத்து உயர்த்தி 'ஹாம்லெட்டின் நல்வாழ்வுக்காக' என்று கூறிக் குடித்தான். எல்லோருடைய கவனமும் மறுபடியும் வாட் போரில் பதிந்த போது தன் அருகில் இருந்த மதுக் கோப்பையில் கொடிய விஷத்தைக் கலந்தான் க்ளாடியஸ். ஒருவேளை லார்டெஸ் தோல்வியுற்றால்—







அவனால் ஹாம்லெட்டைக் கொல்ல முடியாமல் போகுமானால் — எப்படியும் அன்றே இளவரசனின் வாழ்வை முடித்தாக வேண்டும் என்ற உறுதியோடு மதுக் கோப்பையிலும் விஷத்தைக் கலந்து வைத்தான் க்ளாடியஸ்.

விஷக் கோப்பையைக் கையிலேந்திய படி, புன்முறுவலுடன் வெற்றியின் தலைவாசலில் நிற்கும் ஹாம் லெட்டை பார்த்து ''ஹாம்லெட், இதை அருந்துகிறாயா?'' என்று கேட்டான் க்ளாடியஸ். ஆனால் ஹாம்லெட் ''இந்தப் போட்டியின் முடிவில்'' என்று, தலையசைத்துத் தன் மறுப்பைத் தெரிவித்தான். அதே சமயம் லார்டெஸ் அசந்திருக்கும்போது, ஹாம்லெட்டின் வாள் அவன் உடலில் உராய்ந்து கொண்டு போயிற்று. ''நம் மகன் வெற்றி பெறுவான்'' என்று கொக்கரித்தான் க்ளாடியஸ் போலியான மகிழ்ச்சியுடன்.

ஹாம்லெட் தனது அபாரமான வாள் வீச்சினால் லார்டெஸைத் திணற அடித்துக் கொண்டிருந்தான். வியர்வை வழியும் தன் மகனுக்கு, அதைத் துடைத்துக் கொள்ளத் தனது கைக் குட்டையைக் கொடுத்த ராணி; மகிழ்ச்சித் தவிப்புடன் தன் தாகத்தைத் தணித்துக் கொள்ள மதுஅருந்த நினைத் தவள் கணவனின் முன்பிருந்த விஷக் கோப்பையைக் கையிலெடுத்தாள். பரபரப்படைந்த க்ளாடியஸ், ''அதைக் குடிக்காதே!'' என்று தடுப்பதற்குள் காரியம் மிஞ்சிவிட்டது. 'என் மகனின் நல்வாழ்வுக்காக!' என்று கூறியபடி அந்த விஷங் கலந்த மதுவைக் குடித்து விட்டாள். அதுமட்டுமா? அதைத் தன் மகனிடமும் நீட்டினாள் குடிக்கும்படி. ஆனால் ''பிறகு ஆகட்டும்'' என்று கூறிய படி ஹாம்லெட் மறுபடி சண்டையிடத் தயாரானான்.

சற்றே அஜாக்கிரதையாக இருந்த அந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்ட லார்டெஸ் 'இதோ வாங்கிகொள்' என்றுகூறி ஹாம்லெட்டைத் தனது விஷந்தோய்ந்த வாளினால் காயப் படுத்தி விட்டான். ஆனால் அடுத்த விநாடியே ஹாம்லெட் லார்டெஸின் வாளைத்தாக்கி அது தரையில் விழ, அதன்மீது தன் காலைப்பதித்துக் கொண்டான். ஆயுதமிழந்த நிலையில் லார்டெஸ் நிர்கதியாக நின்றான் தலை குனிந்தபடி. இந்த வெற்றிக் களிப்பில் ஒரு குழப்பம் நிகழ்ந்து விட்டது. அது விதியின் விளையாட்டு. பெருந்தன்மையோடு எதிரிக்கு அவன் ஆயுதத்தைத் திருப்பித் தருவதாக நினைத்துக் கொண்டு அவனுடைய விஷந்தோய்ந்த வாளைத் தான் வைத்து







கொண்டு தன்னுடைய வாளைத் தவறுதலாக அவனிடம் கொடுத்து விடுகிறான் ஹாம்லெட். லார்டெஸுக்கு ஆயுதமளித்த அதே வேகத்தில் அவனைத் தன்னிடமிருந்த வாளினால் அவனது தோளிலே காயமுண்டாக்கித் தன் திறமையைக் காட்டினான் ஹாம்லெட். அதே சமயத்தில் ராணி — ஹாம்லெட்டின் தாய் — ''பானம், நான் அருந்திய பானம்! அது விஷம். நான் விஷமிடப்பட்டு விட்டேன்'' என்று அலறியபடி க்ளாடியஸின் காலடியில் சரிந்து பிணமானாள்.

பீதியுடன் தாயையே வெறிக்கப் பார்த்தபடி நின்றான் ஹாம்லெட். இதற்குள் லார்டெஸின் விஷவாளினால் ஏற்பட்ட காயம் தன் வேலையை இரு வீரர்களிடமும் காட்டலாயிற்று. முதலில் மயங்கி விழுந்தது லார்டெஸ்தான்! தள்ளாடித் தடுமாறி விழுமுன் அவன், ஹாம்லெட்டும் இன்னும் சற்று நேரத்தில் இதே நிலைக்கு ஆளாகப் போவதை அறிவித்தான். அதே விஷக்கத்தியினால் அவனைத் தான் காயப் படுத்தியதை கூறிவிட்டு ''இதற்கெல்லாம் காரணம் அரசன் க்ளாடியஸ்தான்'' என்று தன் கடைசி மூச்சை விடுகிறான் லார்டெஸ்.

ஹாம்லெட்டுக்குக் கண்கள் இருண்டன. உடல் தள்ளாடியது. ஆனாலும் தன்னுடைய பலத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு விஷவாளுடன் க்ளாடியஸ் மீது பாய்ந்தான். அந்த வாளை அவன் உடலில் பதித்தான். அது போதாது என்று எண்ணியவன் அவன் தலையை வளைத்துப் பின்பக்கமாக நிமிர்த்தி தன் தாய் பருகியகோப்பையில் மீதமிருந்த விஷமிட்ட பானத்தை அவன் வாயில் பலவந்தமாக ஊற்றிக் குடிக்கச் செய்தான்.

ஹாம்லெட்டுக்கும் கண் இருண்டு கொண்டு வந்தது. தள்ளாடி விழப் போன ஹாம்லெட்டை, உயிர்த் தோழன் ஹொரேஷியோ தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

''எனக்காக நீ செய்யவேண்டிய கடமை ஒன்றிருக்கிறது. உலகத்துக்கு... என் செயல் நியாயமானது என்பதைச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டிருக்கும் போதே அந்த துர்ப்பாக்கிய சாலியான இளவரசன் ஹாம்லெட்டின் மூச்சு அடங்கலாயிற்று. தனக்குப் பிறகு அரியணை ஏறுவது யார் என்பதையும் அறிவித்த பிறகே அவன் ஆவி பிரிந்தது.

டென்மார்க்கின் இளவரசன் - ஹாம்லெட்டின் உடலை ராணுவ மரியாதைகளுடன் அடக்கம் செய்தார்கள்.

முற்றும்.

அரபுக் குட்டிக் கதைகள்

தொகுத்தவர்: கு. அழகிரிசாமி

இங்கே வருவானேன்?

ஒரு நாள் இஸ்ரேல் மன்னனிடம் புகழ் பெற்ற ஒரு ஞானியைப் பற்றிச் சொன்னார்கள். உடனே அந்தஞானியை அழைத்து வரும்படி கட்டளையிட்டான் அரசன். அவரும் புறப்பட்டு வந்தார்.

''ஞானியாரே! தாங்கள் என் அரண்மனையில் என் கூடவே இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றான் அரசன்.

''சம்மதிக்கிறேன். ஆனால் நான் கேட்கும் ஒரு கேள்விக்கு நீ பதிலளிக்க வேண்டும்'' என்றார் ஞானி.

''கேளுங்கள்.''

''என்றாவது ஒருநாள் நீ அரண்மனைக்குள் வரும்போது உன் மகளை நான் கட்டித் தழுவி முத்தமிடுவதைப் பார்த்தால் நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டார் ஞானி.

''அட அயோக்கியப் பயலே! என் முன்னிலையில் கொஞ்சமும் பயமில்லாமல் இப்படிப் பேசின உன்னை என்ன செய்தால் என்ன?'' என்று கோப வெறியோடு சீறிக் கத்தினான் அரசன்.

அதற்கு ஞானி சொன்னார்: ''அரசனே! நான் ஏற்கனவே ஒரு நல்ல அரசனிடம் இருந்து கொண்டிருக்கிறேன். இந்த மாதிரியான எழுபது குற்றங்கள் செய்தும் அவன் என்னைத் திட்டியதில்லை; அடித்ததில்லை; விரட்டியதில்லை. நீயோ குற்றம் செய்வதற்கு முன்பே இப்படிச் சீறுகிறாய். அவனை விட்டு உன்னிடம் வருவானேன்!'' என்று சொல்லிக் கொண்டே ஞானி போய் விட்டார்.

அகமத் அல் கலியூபி.



ஐந்து சரக்குகள்

ஒரு சமயம் சைத்தான் ஐந்து கழுதைகளை ஓட்டிக்கொண்டு போவதை இயேசு பார்த்தார். அந்தக் கழுதைகளைப் பற்றி அவன் இயேசுவிடம் பின்வருமாறு கூறினான்:

''இந்த ஐந்து கழுதைகளும் ஐந்து வகையான சரக்குகளைச் சுமந்து கொண்டிருக்கின்றன. அவற்றை விற்கலாம் என்று போய்க் கொண்டிருக்கிறேன்.''

''இவை என்ன சரக்குகள்?''

''முதல் கழுதை சுமக்கும் சரக்கு கொடுமை என்பதாகும்'' என்றான் சைத்தான்.



''இதை யார் வாங்குவார்கள்!'' என்று கேட்டார் இயேசு.

''அரசர்கள் வாங்குவார்கள்!'' என்றான் சைத்தான்.

''அடுத்த கழுதை சுமக்கும் சரக்கு என்ன?''

''கர்வம்.''

''அதை யார் வாங்குவார்கள்?''

''பணக்காரப் பிரபுக்கள். மூன்றாவது கழுதை சுமக்கும் சரக்கு பொறாமை.''

''அதை யார் வாங்குவார்கள்?''

''படிப்பாளிகள். நான்காவது கழுதை சுமக்கும் சரக்கு மோசடி.''

''அதை யார் வாங்குவார்கள்?''

''வியாபாரிகள். ஐந்தாவது கழுதையின் சரக்கு தந்திரம்.''

''அதை யார் வாங்குவார்கள்?'' என்று கேட்டார் இயேசு.

''பெண்கள்'' என்றான் சைத்தான்.

அல் தமீரி.



மதியூகி மந்திரி

ஓர் அரசன் மிகுந்த பெண்ணாசை கொண்டவனாக இருந்தான். அப்படி இருக்கக் கூடாது என்று அவனுக்குப் புத்தி சொல்லி வந்தான் மந்திரி. ஒருநாள் ஒரு பாடகி அரசனைப் பார்த்து, ''முன்போல நீங்கள் என் மீது இப்போது பிரியமாக இல்லை. ஏன்?'' என்று கேட்டாள்.

''உன்மேல் பிரியம் வைத்ததைக் கூடாது என்று மந்திரி தடுக்கிறார்'' என்றான் அரசன்.

''அப்படியானால் மந்திரியிடம் போக என்னை அனுமதியுங்கள். அப்புறம் நான் என்ன செய்கிறேன் என்பதையும் பாருங்கள்'' என்றாள் பாட்டுக்காரி.

அரசனும் அனுமதித்தான்.

மந்திரி தனியாக இருக்கும் நேரம் பார்த்து அவனிடம் போனாள் பாடகி. அவனைத் தன்னுடைய சாகஸங்களாலும் தந்திரங்களாலும் அவள் மடக்கி விட்டாள். மந்திரி எழுந்து ஆவலோடு அவள் அருகில் வந்தான்.

''நீங்கள் என்னைத் தொடக் கூடாது. என்னைத் தூக்கிக் கொண்டு சிறிது தூரம் சுமந்து செல்ல நீங்கள் தயார் என்றால் என்னைத் தொடலாம்'' என்றாள்.

மந்திரியும் இணங்கினான். அவன் தவழ்வது போல் கைகளை ஊன்றிக் கொண்டான். அவன் மேல் ஏறி உட்கார்ந்து கொண்ட பாடகி, அவனைத் தவழ்ந்து போகச் சொன்னாள். அவள் ஏற்கனவே தகவல் கொடுத்திருந்ததால் அந்தச் சமயம் பார்த்து அரசனும் அங்கே வந்தான்.

''மந்திரியாரே! என்ன இது! பெண்ணாசை கூடாது என்று என்னைத் தடுத்த நீரே இப்படி ஆகிவிட்டீர்!'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் அரசன்.

''அரசே! உங்களுக்கு இந்தக்கதி நேர்ந்து விடக்கூடாது என்று எச்சரிப்பதற்காகவே இவ்வாறு செய்துகாட்டுகிறேன்'' என்றான் அந்த மந்திரி.

மதியூகி மந்திரியின் பதிலை மெச்சினான் அரசன்.

அகமத் அல் – ஷிர்வானி

மூன்று மாதர்கள்

இயாஸ் இபின் முவாவியா என்பவரிடம் மூன்று மாதர்கள் வந்தார்கள். அவர்களில் ஒருத்தியைக் கைப்பிள்ளைக்காரி என்றும் மற்றொருத்தியைக் கன்னிப் பெண் என்றும், மூன்றாமவளைக் கணவனை விட்டுப் பிரிந்து வசிக்கும் வாழாவெட்டி என்றும் சொன்னார் முவாவியா.

''இது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?'' என்று அவரைக் கேட்டார்கள்.

அவர் சொன்ன பதில்: ''உட்காரும் போது தன் மார்பைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு அவள் உட்கார்ந்தாள்: அவள் குழந்தைக்குப் பால் கொடுக்கும் கைப்பிள்ளைக்காரி.

''மற்றொருத்தி உள்ளே நுழையும் போது யாரையும் ஏறிட்டோ திரும்பியோ பார்க்காமல் வந்தாள்: அவள் கன்னிப்பெண்.

''மூன்றாமவள். உள்ளே நுழைந்ததும் இரண்டு பக்கமும் திரும்பி எல்லோரையும் நிமிர்ந்த வாக்கில் பார்த்தாள்: அவள் வாழாவெட்டி.''

இபின் அல் ஜவ்ஸி.



விருந்தாளிக்குச் சொன்னது

பாலைவனத்தில் பலநாட்கள் அன்னம் தண்ணீர் இல்லாமல் வாடி மெலிந்து எலும்புக் கூடாகி மூர்ச்சித்துக் கிடந்தான் ஒருவன். அவனை ஓர் அராபியன் பார்த்தான். அவனைத் தன்



வீட்டுக்குக் கொண்டு வந்து சாப்பாடு போட்டு நீ இங்கேயே ''மூன்று நாட்கள் இருந்து உடம்பைத் தேற்றிக் கொண்டு அப்புறம் உன் ஊருக்குப் போகலாம்'' என்று சொன்னான்.

அப்படியே அவனும் அங்கே தங்கிச் சௌகரியமாகச் சாப்பிட்டுக் கொண்டு இழந்த சக்தியை மீண்டும் தேடிக் கொண்டான். மூன்றாம் நாள் வீட்டுக்காரன் வெளியே போயிருந்த சமயம், அவனுடைய மனைவியைக் கெட்ட எண்ணத்தோடு தொடப் போனான் விருந்தாளி. அவள் அவன் கையைத் தட்டி விட்டு அப்பால் போய் விட்டாள். சிறிது நேரத்தில் கணவன் வீடு திரும்பியதும், அவனிடம் நடந்த கதையைச் சொன்னாள் மனைவி. அதைக் கேட்ட கணவன் விருந்தாளியைத் திட்டவில்லை; கோபிக்கவில்லை; அவனிடம் பேசவுமில்லை.

''இன்று நான் ஊருக்குப் போகிறேன்'' என்றான் விருந்தாளி.

''சந்தோஷமாகப் போய் வா'' என்று விடை கொடுத்தான் அராபியன்.

''நீங்கள் எனக்குச் செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்! ஏதாவது ஒன்றைக் கேளுங்கள். ஊருக்குப் போனதும் அனுப்பி வைக்கிறேன்.''

''எங்களுக்கு நீ ஒன்றும் அனுப்ப வேண்டாம். உன் பெற்றோர்களிடம் போய், நாங்கள் உன்னிடம் எப்படி நடந்து கொண்டோம் என்பதையும், நீ எங்களிடம் எப்படி நடந்து கொண்டாய் என்பதையும் 'சொன்னால் போதும்'' என்றான் அராபியன்.

ஓர் அரபுக் கதை.

சத்தியம்

ஒரு காலத்தில் இஸ்ரேல் நாட்டில் ஒரு நல்ல மனிதன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அழகான ஒரு மனைவி இருந்தாள். அவள் ஓர் இளைஞனுடன் தகாத தொடர்பு வைத்திருந்தாள். இதன் பலனாக அவள் கணவனிடம் பிரியமில்லாமல் நடந்து கொள்ளத் தொடங்கினாள். அவன் ஒருநாள் மனைவியைப் பார்த்து ''நீ முன்போல் இல்லை. ஏனென்று எனக்குத் தெரியவில்லை. என்னைத் தவிர வேறு எந்த ஆணும் உன்னைத் தொட்டதில்லை என்று நாளை நீ மலையின் பக்கம் நின்று சத்தியம் செய்ய வேண்டும்'' என்றான்.

இஸ்ரேலில் அப்படிப் பட்ட ஒரு மலை இருந்தது. அதன் பக்கம் நின்று யார் பொய்ச் சத்தியம் செய்தாலும் உடனே அவர்கள் உயிர் போய்விடும்.



அவள் சத்தியம் செய்வதாக ஒப்புக் கொண்டாள். கணவன் வெளியே போய் விட்டான். அவள் ரகசியமாக அந்த இளைஞனைச் சந்தித்து, ''இந்த மாதிரி நான் சத்தியம் செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறேன். ஆனால் பொய்ச் சத்தியம் செய்யக் கூடாது.

அதனால் ஒரு யோசனை சொல்கிறேன். நீ நாளை கழுதைக் காரன் மாதிரி உடுத்துக் கொண்டு ஒரு கழுதையோடு காலையில் வந்து நின்று கொண்டிரு. அந்த வழியாக நானும் என் கணவனும் வருவோம். வாடகைக்குக் கழுதைச் சவாரி கேட்டால் நீ சம்மதித்து அப்படியே செய்ய வேண்டும்'' என்றாள்.

அவனும் அவ்வாறே செய்வதாகச் சொல்லி விட்டுப் போனான்.

மறுநாள் காலையில் கணவனும் மனைவியும் சத்தியம் செய்வதற்காக மலையை நோக்கிப் புறப்பட்டார்கள். சாலைக்கு வந்ததும், ''ஐயோ மலை எவ்வளவு தூரம் இருக்கிறது. அவ்வளவு தூரம் நடப்பது எப்படி? சவாரி செய்வதற்கு ஒரு கழுதையை வாடகைக்கு அமர்த்துங்களேன்'' என்று கேட்டாள் மனைவி.

கணவனும் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். குறிப்பிட்ட கழுதைக் காரன் அங்கே ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்தான்.

''மலைக்குப் போக வேண்டும். கழுதையை வாடகைக்கு விடுகிறாயா?'' என்று கேட்டான் கணவன்.

அவனும் கழுதையைக் கொண்டு வந்து எதிரே நிறுத்தினான். அவள் கழுதை மீது ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

மலைக்கு வந்து சேர்ந்தார்கள். அவள் கழுதையை விட்டு இறங்கினாள். இறங்கும் போது வேண்டுமென்றே அவள் தவறி விழுந்தாள். உடனே கழுதைக்காரன் பார்த்து அவளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான்.

''என்னைத் தொட்டு விட்டாயே படுபாவி'' என்று கழுதைக் காரனை அவள் திட்டிவிட்டு மலையை நோக்கிக் கைகளை நீட்டி சத்தியம் செய்யத் தொடங்கினாள்:

''என் கணவனையும் இந்தக் கழுதைக் காரனையும் தவிர யாருமே என்னைத் தொட்டது கிடையாது.''

இவ்வாறு அவள் சத்தியம் செய்து முடித்தாளோ இல்லையோ, பொய்ச் சத்தியம் செய்தவர்களின் உயிரை வாங்கும் அந்த மலை அப்படியே கூட்டோடு குலுங்கி நடுங்கியது. உடனே அந்த இடத்தை விட்டே மறைந்து விட்டது!

அகமத் அல் ஷர்வானி.

ஆசனங்களிலேயே புகழ் பெற்றது. **பத்மாசனம்.** வடமொழியில் தாமரைக்குப் பத்மம் என்று பெயர். இந்தப் பத்மாசனத்தினால் இடுப்பு, முழங்கால் இணைப்புகள் வலுப்பெறும். யோகிகள் பழகும் யோகாசனம் இது. நன்கு சம்மணமிட்டு நிமிர்ந்து உட்காரும் நிலை தான் இந்த ஆசனத்தின் அமைப்பு.

(1) முதுகை நிமிர்த்தித் தரையில் கால்களை நீட்டிய படி அமருங்கள்.

(2) வலது முழங்காலை மடக்கி, வலது பாதத்தை இரு கைகளாலும் பிடித்து இடதுபக்க இடுப்புப் பக்கத்துக்கு வருமாறு வளையுங்கள். இப்படிச் செய்யும் போது பாதத்தை உங்கள் முகத்தைப் பார்க்கும்படி திருப்ப வேண்டும். இந்த நிலையில் வலது பாதத்தை இடது துடையின்மீது வையுங்கள்.

(3) இதே மாதிரி இடது காலையும் மடக்கி, இடது பாதத்தை நிமிர்த்தி வளைத்து வலது துடையில் படிய வையுங்கள்.

(4) இரு கைகளையும் முழங்கால்களின் மீது வைத்தபடி நிமிர்ந்து உட்காருங்கள். இப்போது நீங்கள் தாமரை நிலையில் அமர்ந்திருப்பீர்கள். இதே நிலையில் அமைதியாக அமர்ந்தபடி பத்துவரை எண்ணுங்கள்.

(5) இந்த நிலையிலிருந்து விடுபட மெதுவாக முதலில் ஒருகாலைத் துடையின் இருக்கையிலிருந்து எடுத்து நீட்டுங்கள் அடுத்து மற்றொரு காலையும் நீட்டுங்கள். முதல் நிலையில் சில விநாடிகள் அமர்ந்திருங்கள்.

(6) பிறகு கால் மாற்றிப் போட்டு மறுபடியும் பத்மாசனம் போடுங்கள். அதாவது முதலில் இடது காலை மடக்கி அதன் மீதாக வலது காலை மடக்கிப் போட்டு பத்மாசனமிடுங்கள். அதே போல பத்து வரை எண்ணுங்கள். சிறிது நேரங்கழித்து ஆசன நிலையிலிருந்து விடுபடுங்கள். ஒரு நாளைக்கு இப்படி ஒரிரு முறை பயின்றால் நிமிர்ந்த பார்வையும் நேரான உடலும் அழகுத் தோற்றமும் ஏற்படும்.

ஆசனம் போடுங்கள் ஆரோக்கியமாக வாழுங்கள்!

பத்மாசனம் போடும் குழந்தை:
கற்பகமீரு

புகைப்படங்கள்: உத்ரா














விந்தை உலகம்

ஆழி




மற்ற விலங்குகளுக்கு இல்லாத சிறப்பு சிங்கத்திற்கு உண்டு. தாய்ச்சிங்கம், காட்டில், தாய் இல்லாமல் தவிக்கும் மற்றச் சிங்கக் குட்டிகளைக் கண்டால் விட்டு விடாது. அவற்றைத் தன்னுடன் கொண்டு வந்து தன் குட்டிகளுடன் சேர்த்து வளர்க்கும்!



தேனீக்கள் மிகவும் சுத்தமானவை. தேன் கூட்டில் ஒரு தேனீக்கு வியாதி வந்து விட்டால் அது தானாகவே ஓரிடத்திற்குப் பறந்து சென்று இறந்துவிடும். அப்படிப் போகாவிட்டால் மற்ற தேனீக்கள் அதைக் கொன்றுவிடும்!


முத்துக்கள் வெள்ளை நிறத்தில் இருப்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், முத்துக்கள் எல்லா நிறங்களிலும் இருக்கின்றன! கறுப்பு நிற முத்து தான் மிக மிக அரிதாகக் கிடைக்கிறது! மிகவும் விலை உயர்ந்த முத்து கறுப்பு முத்துதான். வலம்புரிச் சங்கு மாதிரி அதை ஒரு பொக்கிஷமாகவே கருதிப் பாதுகாக்கிறார்கள்.



மாட்டின் வயதை அதன் பற்களைக்கொண்டு கணக்கிடுவார்கள். ஆனால், கலைமானின் வயதை அதன் கொம்புகளிலுள்ள கிளைகளைக் கொண்டு கணக்கிடுவார்கள்! அதன் கொம்புகளிலுள்ள கிளைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிச் செல்லும்!



மத்திய ஆப்பிரிக்காவில், காங்கோ பிரதேசங்களில் 'செட்சே' என்னும் ஈக்கள் இருக்கின்றன. இந்த ஈக்கள் கடித்தால், மனிதர்களும் விலங்குகளும் இரவும் பகலும் தூங்கிக் கொண்டே இருப்பார்கள்! இதற்குத் தூக்கவியாதி என்று பெயர்!



மல்லிகார்ஜுன ஆலயம்
ஒரு மகனிடமிருந்து பிரிதல்

சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் பிறந்த வீரத்திருமகனான கார்த்திகேயன், பெற்றோர் அறிவித்த திருமண போட்டியையொட்டி உலகைச் சுற்றிவரப் புறப்பட்டார். திரும்பிவந்த போது, பெற்றோர் தனயன் கணபதிக்கும் போட்டியின் வெற்றிப் பலனை அளித்து, கணபதிக்கு சித்தியை யும் புத்தியையும் மணமுடித்து விட்டதைப் பார்த்தார்.


கோபம் கொண்ட கார்த்திகேயன் வீட்டைத் துறந்து தென்னிந்தியா வில் உள்ள கிரௌஞ்ச பர்வதத்தை அடைந்தார். பெற்றோரால் பிரிவாற் றாமை தாள முடியவில்லை. அவர்கள் மகனைத்தேடி கிரௌஞ்ச பர்வதத் திற்கு வந்தனர். ஆனால் அவர்கள் அங்கே வருவதை அறிந்து, கார்த்தி கேயன் தென்னகத்தில் இன்னும் உள்ள வேறொரு இடத்திற்கு சென்று விட்டார்.

ஆனால் சிவனும் பார்வதியும் மல்லிகார்ஜுனராக வந்த இடத்தி லேயே தங்கி விட்டார்கள். இப் போதும் அவர்கள் ஒருவரை மாற்றி ஒருவர் மகனைப் பார்க்க இளம்பிறையின் போது சிவபெருமா னும், முழுநிலா அன்று பார்வதியும் செல்கிறார்கள்.

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீசைல மலையில் சிவபெருமான் மகனைத் தேடி வந்த இடத்தில் மல்லிகார்ஜுன ஆலயம் கட்டப்பட் டிருக்கிறது. இந்தியாவில் சிவபெரு மான் திருக்காட்சி அளித்த இடங் களில் ஒன்றாக - பன்னிரண்டு ஜோதிர் லிங்கத் தலங்களில் ஒன்றாக அதாவது ஒளியின் வடிவாக விளங்கும் இடங் களில் ஒன்றாக இருக்கிறது இந்த ஆலயம்.

अतः परं प्रवक्ष्यामि मल्लिकार्जुन संभवम्।
यं श्रुत्वा भक्तिमान् धीमान् सर्वपापैः प्रमुच्यते॥

ஸ்ரீ மல்லிகார்ஜுனரின் தோற்ற வரலாற்றை கேட்கின்ற புத்திமானான பக்தன், பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுபடுகிறான்.





மேலேயுள்ள இவரும் 1976ல் பத்திரிகைகளில் பிரபலமாக அடிபட்டவர்கள். இவர்களில் எத்தனை பேரை உங்களால் இனங்கண்டு சொல்ல முடியும்?

விடை: 1. குர்ட் வால்ட்ஹீம் (Kurt wald heim) ஐ. நா. பொதுக் காரியதரிசி 2. இயான் ஸ்மித் (Ian Smith) ரொடீஷியா. 3. ஹுவா குவா ஃபெங் (Hua Kua - Feng) சீனா. 4. ராபர்ட் பொராஸா (Robert Borassa) முன்னாள் கியூபெக் பிரதமர். 5. அன்வார் சதாத் (Anwar Sadat) எகிப்திய பிரதமர்.

தெரியுமா?

3031 அல்பேனியாவின் தலைநகர் எது

3032 டாஸ்மானியாவைக் கண்டு-பிடித்தவர் யார்?

3033 உலகிலேயே அதிக அளவுக்கு வெள்ளி உற்பத்தி செய்யும் நாடுஎது?

3034 பார்ஸிகளின் வேத புத்தகத்தின் பெயர் என்ன?

3035 இந்தியாவில் கிறிஸ்துவ மதத்தை முதலில் பரப்பியது யார்?

3036 டேபிள் டென்னிஸுக்கு ஆதியில் வழங்கப்பட்ட பெயர் என்ன?

3037 கால்சியத்தை (Calcium)க்கண்டு பிடித்தவர் யார்?

3038 அலுமினியத்தைக் கண்டுபிடித்தவர் பெயர் என்ன?

3039 பௌதிகத்துக்காக 1930-ல் நோபல் பரிசு பெற்றது யார்?

3040 தங்க மயில் பரிசு எதற்காக வழங்கப் படுகிறது?

3041 உலகிலேயே முதன் முதலாக ஒரு பெண்மணியைப் பிரதமராகக் கொண்ட நாடு எது? பிரதமர் யார்?

3042 கோஃபா கால்வாய் (Gofa Canal) வழியாக நீங்கள் பயணம் செய்தால் எந்த நாட்டில் இருப்பீர்கள்?

3043 கனவு ஏரியும் மரண ஏரியும் (Lake of Dreams, Lake of Death) எங்கு உள்ளன?

3044 Unhappy India- என்ற நூலை எழுதியவர் யார்?

3045 நேரு விருதை முதன் முதலில் பெற்றவர் யார்?

3046 ஸூயஸ் கால்வாயை வெற்றிகரமாகக் கட்டி முடித்தவர் பனாமா கால்வாய் கட்டுவதில் தோல்வி கண்டார். இவர் யார் தெரியுமா?

3047 மேற்கிந்தியத் தீவுகளில் மிகப் பெரியது எது?

3048 இன்ஸோமேனியா என்பது என்ன?

3049 RPF/- என்பது எதைக் குறிக்கிறது?

3050 வடிவ கணிதத்தின் (Geometry) தந்தை எனப்படுபவர் யார்?

தெரியுமே!

3031. டிரானா (Tirana). 3032. டாஸ்மான் என்னும் டச்சுக்காரர் 1542ல் கண்டு பிடித்தார். 3033. மெக்ஸிகோ. 3034. ஜெந்த் அவெஸ்தா (Zend Avestha). 3035. செயின்ட் தாமஸ் என்று கருதப்படுகிறது. 3036. பிங்பாங். 3037. ஸர் ஹம்ப்ரி டேவி. 3038. ஹான்ஸ் கிறிஸ்டியன். 3039. ஸர் ஸி. வி. ராமன். 3040. பாரதத்தில் நடைபெறும் உலகத் திரைப்பட விழாவில் முதல் பரிசு பெறும் படத்துக்கு. 3041. ஸ்ரீலங்கா — பிரதமர், ஸ்ரீமதி பண்டாரநாயகா. 3042. ஸ்வீடன் நாட்டில். 3043. நமக்குத் தெரியும் சந்திரனின் பகுதியில், இவை வறண்ட பகுதிகள். 3044. லாலா லஜ்பத் ராய். 3045. ஊதாண்ட் (U Thant) 1965ல் பெற்றார். 3046. ஃபெர்டினண்ட் டி லெஸ்ஸெப்ஸ். (Ferdinand de Lesseps) 3047. ஜமைக்கா. 3048. ஒருவித தூக்கமின்றி அவஸ்தைப்படுவது. 3049. ரயில்வே பாதுகாப்புப் படை (Railway Protection Force). 3050. யூக்லிட். (Euclid).

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032.
Editor: K. R. Athmanathan.
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS-600032.

மிகச் சிறிய விஷயங்கள்தான் எங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பினை அளிக்கின்றன.

ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்களின் முன்னோடிகளான சுந்தரம்-கிளேட்டனுக்கு பாதுகாப்பு என்பது ஒரு அர்த்த மற்ற உறுதிமொழி அல்ல. எங்கள் சாதனங்கள் முழுமையான பாதுகாப்பிற்கு உறுதியளிப்பதற்கேற்ப உருவாக்கப்பட்டவை.



ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் அவர்களுடைய அன்புச் செல்வங்களைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர் — வர்த்தக வண்டிகளில் பொருத்தியுள்ள பாதுகாப்பு சாதனங்களில் நம்பிக்கை வைத்தே.

இந்த பாதுகாப்புச் சாதனங்களை உரு வாக்கிய நாங்கள் பெருமிதமடைவது இயற்கைதானே. இருந்தபோதிலும் இது ஒரு மிகப் பெரிய பொறுப்பு. முழுமையான காற்று மற்றும் காற்று-உதவி பிரேக் சாதனங்களின் ஒவ்வொரு சிறிய உட்புப் பினையும் மிகவும் நுணுக்கமாகக் கவனிக் கிறோம். இதனால்தான் அனேகமாக ஒவ்வொரு ஹெவி-ட்யூடி வர்த்தக வண்டி யிலும் எங்களுடைய ஏர்-பிரேக் ஆக்சு வேஷன் சாதனங்கள் அசல் உறுப்புகளாகப் பொருத்தப்பட்டுள்ளன. இது ஒரு அத்யா வசியமான தேவையும்கூட.

உங்கள் பாதுகாப்பிற்கு எங்கள் உத்திரவாதம்

தொடர்ச்சியான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தரக்-கட்டுப்பாடு — இவைகள் முழுமையான பாதுகாப்பினை அளிக்கும் ஒரு பிரேக் சாதனத்திற்கு வித்திடுகின்றன.

நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றோம் — அதனைப் பாதுகாக்கவும்

CD-TVS' அளிக்கும் முழுமையான காற்று மற்றும் காற்று-உதவிகொண்ட பிரேக் சாதனங்களின் உறுதியான பாதுகாப்பு எப்பொழுதும் உங்களுக்குக் கிடைப்பதற்கு உங்கள் சாதனத்தை முறை யாகப் பராமரியுங்கள். மற்றும் எப்பொழுதும் அசல் CD-TVS உறுப்புகளையே வாங்கி உபயோகியுங்கள். இதனை அலட்சியம் செய்ய வேண்டாம். உங்கள் நன்மைக் காகத்தான் சொல்கிறோம்.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

பாடி, சென்னை 600 050

உங்கள் பாதுகாப்பு எங்கள் தொழில்

CD TVS

SAA/SCL/2588

Registered No. M 9040

மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 50 மலேசியாக்காசு